விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை (13.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 176

## வாகன ஆவணங்களை பரிசோதிக்க இராணுவத்தினருக்கு அதிகாரமில்லை

### பொலிஸ் அதிகாரி எரிக்பெரேரா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனங்களின் ஆவணங்களைப் பரிசோதிக்க இராணுவத்திற்கு அதிகாரமளிக்கவில்லையென பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எரிக்.பெரேரா தெரிவித்துள்ளார். அவ்வாறு பரிசோதிக்கப்படும் பட்சத்தில் அது குறித்து தமக்கு அறிவிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எரிக்பெரேரா ஊடகவியலாளர்களுடன் நடாத்திய சந்திப்பின்போது பொதுமக்கள் தங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் சம்பந்தமாக பொலிஸாருடன் எந்த வகையில் தொடர்பு கொள்வது என்பது பற்றி விளக்கமளித்தார்.

வன்முறைச் சம்பவங்கள் மற்றும் மக்களைப்பாதிக்கும் விடயங்கள் பற்றி பொதுமக்கள் எந்தநேரத்திலும் பொலிஸ் நிலையத்துடன் 119 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்கலாம் என்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் சம்பந்தமாக உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதற்கு விசேடகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்த அவர் இக்குழுவில் தமிழ் மொழி தெரிந்த உத்தியோகஸ்தர்கள் உள்ளதால் பொதுமக்கள் தயக்கமின்றி தமது குறைகளைத் தெரிவிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மோட்டார் வாகனங்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசோதிக்க இராணுவத்திற்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் தலைக்கவசம் இல்லாமல்தான் செல்லவேண்டுமென வற்புறுத்தவும் அவர்களுக்கு அதிகாரம் இல்லை. (10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படைத் தளபதி நேற்று பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கை விமானப்படைத் தளபதியாக எயார் வைஸ் மார்சல் றொசான் குணதிலக்க (வயது 50) நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

விமானப்படைத்தளபதி பொறுப்பேற்பதற்கு முன்னதாக அவருக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

விமானப்படைத் தளபதியாக இருந்த டொனால்ட் பெரேரா முப்படைத் தலைமை அதிகாரியாக பொறுப்பேற்றதையடுத்து றொசான் குணதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

றொசான் குணதிலக்கவின் தந்தை ஹரி குணத்திலக 25 ஆண்டுகளுக்கு முன்பாக 1976-ம் ஆண்டுமுதல் 1981-ம் ஆண்டுவரை விமானப்படைத் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும்

### வெளிவிவகார அமைச்சர் நோர்வேயில் தெரிவிப்பு

(ஒஸ்லோ)



பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வுகாணப்பட வேண்டுமெனஇலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்து நோர்வே அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின் கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.இலங்கையில் நோர்வேயின் பணி, பயன்மிக்கதாக இருப்பதாகத் தெரிவித்த அவர், சமாதானப்பேச்சுக்களை விடுதலைப் புலிகளே குழப்பிவருவதாக தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக நோர்வேயில் தமிழர்கள்! ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு எதிராக நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நோர்வே வெளிவிவகார அமைச்சகத்தில் சந்திப்பை நடத்தி விட்டு மங்கள சமரவீர வெளியே வந்த போது அங்கு திரண்டு நின்ற தமிழர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் காலை 11 மணி முதல் ஒரு மணிநேரம் நடைபெற்றது. மங்கள சமரவீரவின் சந்திப்பினை அறிந்த தமிழர்கள் குறுகிய நேரத்தில் ஒன்று திரண்டு தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது மங்களவுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியும் இலங்கைத் தீவில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட படங்கள் அச்சிடப்பட்ட பதாகைகளையும் மக்கள் ஏந்தி நின்றனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு பொலிஸாரின் அனுமதி பெற்றிருக்காத நிலையிலும் தமிழர்களின் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் இராணுவம் மீது பரவலாகத் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்று இராணுவத்தினருக்கு எதிராக பரவலாகத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. றக்காவீதி பொஸ்கோ பாடசாலைக்கு அருகிலுள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று ஒரு மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது ஒரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை யாழ்.இந்துக்கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இராணுவத்தினர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இராணுவத்தினர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றதாக இராணுவப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இராணுவத்தினர் பதில்தாக்குதல் நடத்தியதாகவும் இதில் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் காயமடைந்ததாகவும் அவர் கூறினார். இத்தாக்குதலில் இராணுவச்சிப்பாய் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

இதேவேளை தொண்டமனாறு பாலத்தருகில் இருந்த இராணுவக் காவலரண் மீது நேற்று முன்தினமிரவு 10 மணிக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேக்கு எதிராக ஒஸ்லோவில் ஆர்ப்பாட்டம்

### ஜே.வி.பி.தீர்மானம்

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்திற்கும் அதன் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிற்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை விரைவில் ஒஸ்லோவில் நடத்துவதற்கு ஜே.வி.பி.திட்டமிட்டுள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நோர்வே (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
கணனிக் கல்விப் பகுதி

## பாகிஸ்தானிடம் இருந்து இலங்கைக்கு நவீனரக ஆயுதங்கள் இறக்குமதி!

(கொழும்பு)

இலங்கைக்கு பாகிஸ்தான் 250 மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை வழங்க இணங்கியுள்ளது.

ஆயுதங்கள் மற்றும் 40 யுத்த டாங்கிகள் என்பன இதில் அடங்குவதாக டி.என்.ஏ. வேற்ட் என்ற இணையத்தளம் செய்திவெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசாங்கம் மேலும் 50 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ உதவிகளையும் இலங்கைக்கு வழங்வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இல்ங்கைக்கான பாகிஸ்தானியத் தூதுவர், முன்னாள் பாகிஸ்தானின் புலனாய்வுப் பணிப்பாளர் என்றும், அவர் மூலமே இந்த ஆயுதக்கொள்வனவு தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

அதேவேளை இலங்கை விமானப்படையினருக்கு 38.1 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிராந்தியத்தில் உள்ள அயல் நாடுகளுக்கு பாகிஸ்தான் மற்றும் சீனா இராணுவ உதவிகளை வழங்குவது தொடர்பில் இந்தியா கவலையடைந்துள்ளதாகவும் அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில் இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் இராணுவ உதவிகளைக் கோரியிருந்தது. எனினும் இலங்கை தமிழர் குறித்து இந்தியாவில் எழுந்த அழுத்தங்கள் காரணமாக இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க இந்தியா இதுவரை முன்வரவில்லை.

இந்த நிலையில் பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்க கூடிய அக்கறை செலுத்தி வருவதாக அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச-9)

# மீண்டும்ஒரு யுத்தம் ஏற்படுவதை தவிர்க்கும் பொறுப்பு அரசிடமும் புலிகளிடமுமே இருக்கிறது

## எரிக்சொல் ஹெய்ம் தெரிவிப்பு

(லண்டன்)

இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் இடம்பெறுவதனை தவிர்த்துக்கொள்ளும் பொறுப்பு அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமே இருக்கின்றது என்று நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தியமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.செய்தி சேவைக்கு அவர் வழங்கியுள்ளபேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இரு தரப்பினரும் யுத்தத்தை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு இருதரப்பினருக்கும் அறிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் தற்கொலைத் தாக்குதல்களைமேற்கொள்வதனை நிறுத்த வேண்டும். அதேவேளை அரசாங்கக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீண்டும் இலங்கையில் யுத்தம் ஏற்படுமானால் இதுவரைகாலமும் போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழு மேற்கொண்ட நடவடிக்கைகள் வீணடிக்கப்பட்டதாக அமைந்துவிடும்.

அத்துடன் இலங்கையில் பாரிய பொருளாதார நெருக்கடி யும் ஏற்பட்டுவிடும். யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து மேற்கொள்வதா? இல்லையா என்பது குறித்து அரசாங்கத்திடமும் புலிகளிடமும் ஐந்து கேள்விகளைக் கேட்டுள்ளோம்.

இதற்கு இருதரப்பினரிடமும் இருந்தும் சிறந்த பதில் கிடைக்கும் என்று நாங்கள் எதிர் பார்க்கின்றோம். (க)

# வற்வரி மோசடி சந்தேக நபரின் வங்கி கணக்குகள் முடக்கம்!

(கொழும்பு)

தெற்காசியாவை உலுக்கிய இலங்கையின் வற்வரி மோசடியில் விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர் ஒருவரது மனைவியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

அவரின் பெயரில் கொழும்பிலுள்ள இரு தனியார் வங்கிகளில் 110 இலட்ச ரூபா வைப்பீடு செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்ததாக இரகசியப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேசிய வருமான வரித்திணைக்களத்தின் முக்கிய நபரான அந்த சந்தேக நபரின் மனைவியின் பெயரிலான இந்த வங்கிக் கணக்குகளில் செயற்பாடுகளை நிறுத்துவதற்குகொழும்பு கேட்டை நீதி மன்றத்திடமிருந்து உத்தரவு பெறப்பட்டுள்ள தாகவும் அந்த அதிகாரி கூறினார்.

இந்த வற்வரி மோசடி தொடர்பாக மேலும் 8 பேரைக் கைது செய்வதற்காக இரகசியப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (க)

# மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு விவசாய நடவடிக்கைகள் பெரும்பாதிப்பு

எரிபொருட்களின் விலை மேலும் அதிகரித்துள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகளும், நுகர்வோர்களும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் மண்ணெண்ணெயின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட பின்னடிக்கின்றனர்.

அதிகரித்த விலையில் மண்ணெண்ணெய் வாங்கும் தாங்கள் அதிகரித்த விலையிலேயே மரக்கறிகளையும் விற்க வேண்டியுள்ளதாக அவர்கள் கூறுகின்றார்கள். இதனால் மரக்கறி விற்பனையில் வீழ்ச்சி ஏற்படுமோ என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் பல பாதிப்புக்குள்ளாகும் நிலை உருவாகியுள்ளது.

ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியில் அவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த உலருணவு நிவாரணம் தற்போது சமுர்த்தி முத்திரை மூலம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யுத்தத்தால் அதிகளவு பாதிக்கப்பட்டவர்கள் யாழ்.குடாநாட்டு மக்களே என்பதை யாவரும் அறியாதிருக்க வாய்ப்பில்லை. இந்நிலையில் அதிகரித்துள்ள நிலையில் அவர்களுக்கான உலர் உணவு நிவாரண பொருட்களையும் குறைந்ததால் அத்தியாவசிய பொருட்களின் விலைகளையும் தமது அன்றாடத் தேவைகளை நிறைவுசெய்ய முடியாமல் தத்தளிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (க)

# நீர்கொழும்பு சிறைக்கைதி சுகந்தினியின் மரணம் சுகவீனத்தால் ஏற்பட்டதாக தீர்ப்பு

கடந்த திங்கட்கிழமை நீர்கொழும்பு சிறைச்சாலையில் மரணமான தமிழ்ப் பெண் கைதி சுகவீனம்காரணமாகவே இயற்கை மரணம் எய்தியுள்ளார் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலைநீர்கொழும்புசிறைச்சாலையில் மரணமான யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுகந்தினியின் மரணம் தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு நீதிவான் காந்தி வணிகசேகரவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான், அஸ்மா நோயின் காரணமாக சுகந்தினியின் நுரையீரல் பெருத் தும் பழுதடைந்தும் புண்ணாகி காணப்படுவதாக பிரேத பரிசோதனை அறிக்கை குறிப்பிடுவதாகக் கூறி அஸ்மாவினால் ஏற்பட்ட இயற்கை மரணம் என தீர்ப்பளித்தார்.

சுகந்தினியின் பிரேத பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி அபேசிங்க நடத்தியிருந்தார். இதே வேளை நீர்கொழும்பு சிறைச்சாலையில் அதேதினம் இரவு மரணமான வத்தளையைச் சேர்ந்த பிரேம திலக்க (வயது 53) என்பவரின் மேலதிக மரண விசாரணை, எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இவரின் பிரேத பரிசோதனையை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி கே.எஸ்.அசோக பிரியரத்ன நிமோனியா நோயின் காரணமாக மரணம் ஏற்பட்டுள்ளதாக பிரேதபரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (க)

# இராசிபலன்

**13.06.2006**

**(வைகாசி 30, செவ்வாய்க்கிழமை)**

**துதியை முன்னிரவு 9.38 மணிவரை**

**பூராடம் முன்னிரவு 5.01 மணிவரை**

**இராகுகாலம் 2.52-4.22 மணிவரை**

**சுபநேரம் 10.22-11.52 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, எதிர்பாராத செலவு, திடீர் நன்மை, ஆரோக்கியக்குறைவு. |
| இடபம் | பிரயாண பயம், வீண்பகை, காரிய தடங்கல், ரோகநிலை. |
| மிதுனம் | சௌக்கிய விருத்தி, நல்ல செய்தி, குடும்ப நன்மை, வாகன சுகம். |
| கடகம் | சத்துரு ஜெயம், செய்தொழில் விருத்தி, சுபசெய்தி, ஆரோக்கியம். |
| சிங்கம் | சிறுவியாதி, கௌரவக்குறைவு, பணக்குறைவு, வேலைச்சுமை. |
| கன்னி | கல்வியில் ஆர்வம், வாகன சுகம், நண்பர்கள் சந்திப்பு, மனப்பயம். |
| துலாம் | கூட்டு முயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, உடல்நலம். |
| விருச்சிகம் | விவாதம், மாதர் நட்பு, உடல் நலக்குறைவு, வஞ்சகம். |
| தனுசு | பெரியோர் ஆதரவு, பாக்கியம், தேகநலன், புதிய முயற்சி. |
| மகரம் | பிரயாண அலைச்சல், சிந்தனை மிகுதி, உறவினர் சந்திப்பு, பொருள் விரயம். |
| கும்பம் | மனமகிழ்ச்சி, நல்ல மனைவாசம், காரிய சித்தி, பொருள் சேர்க்கை. |
| மீனம் | தொழில் நன்மை, அதிக பிரயாசை, பாராட்டு, தெய்வசிந்தை. |

- வளவன்

# பாடசாலைகளுக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

சுகாதார வசதியற்ற 600 பாடசாலைகளை முதல் கட்டமாக தெரிவுசெய்து சுகாதார மயப்பாடசாலைகள் எனும் திட்டத்தின் கீழ், அவற்றுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்போவதாக கல்வியமைச்சின் போஷாக்கு திட்டப்பணிப்பாளர் றேனுகா பரிஸ் தெரிவித்துள்ளார்.

இப் பாடசாலைகளுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான நிதியுதவியை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கவுள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள 9 ஆயிரத்து 800 பாடசாலைகளில் 6 ஆயிரத்து 27 பாடசாலைகளில் போஷாக்கு உணவுத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

அப்பாடசாலைகளில் கட்டம் கட்டமாக அடிப்படை சுகாதார வசதியை ஏற்படுத்தி கொடுக்கவும் கல்வியமைச்சு கூடிய கவனம் செலுத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# உலகவங்கியின் நிதியுதவியுடன் வீதிகள் புனரமைக்கப்படுமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தார்வீதியாக இருந்து கிரவல் வீதியாக மாறிய சகல வீதிகளும் உலக வங்கி நிதி உதவியுடன் மீண்டும் தார் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது.

குடாநாட்டில் பிரதேச சபைகளின் பராமரிப்பில் இருந்து வந்த பெரும்பாலான தார் வீதிகள் போர் காலச் சூழ்நிலையாலும் பராமரிப்பின்மையாலும் நிதிப் பற்றாக்குறையாலும் கிரவல் வீதியாக மாறியுள்ளன. இதனால் போக்குவரத்து செய்ய முடியாமல் மக்கள் பெரும்கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இக் குறைபாடுகள் பற்றிப் பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்ததை தொடர்ந்து உலக வங்கியின் நிதியுதவியுடன் கிரவல் வீதியாக மாறியுள்ள தார் வீதிகளை மீண்டும் தார் வீதிகளாக புனரமைப்பதற்கான நடவடிக்கை நியாப்திட்ட பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து சேதமடைந்த வீதிகளின் மதிப்பீட்டு அறிக்கை, ஆய்வறிக்கை உட்பட ஏனைய விபரங்களை அனுப்பிவைக்கும்படி உள் ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச சபைச் செயலாளர்களையும் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க-7)

## சுருக்கெழுத்து தட்டெழுத்து

# வகுப்புக்களுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், பாடசாலையை விட்டு விலகியோர் நலன்கருதி வார நாட்களில் தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கிலத் தட்டெழுத்து வகுப்புகளையும் வார இறுதி நாட்களில் ஆங்கில, சிங்கள மொழி வகுப்பு களையும் ஜூலை 1ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வதிரி, கரவெட்டி என்னும் முகவரியில் உள்ள கழகப் பயிற்சி நிலையத்தில் வார நாட்களில் காலை 8.30 முதல் பகல் 1.30வரை பெற்றுக்கொள்ளலாம் எனவும் விண்ணப்ப முடிவுத் திகதி 27.6.2006எனவும் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (க)

# விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிக்கு விண்ணப்பித்தவர்கள் கவனத்துக்கு

(கொழும்பு)

க.பொ.த.உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு உரிய முறையில் விண்ணப் பித்து, தபால் விநியோகத்தில் ஏற்பட்ட தாமதங்களினால் உதவிப் பரீட்சகர் நியமனக் கடிதம் கிடைக்காதவர்கள், விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்களில் பிரதம பரீட்சகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உதவிப் பரீட்சகர் பட்டியலில் பெயர் இடம் பெற்றிருந்ததால் மதிப்பீட்டு பணியில் இணைந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விடைத்தாள்மதிப்பீட்டுப்பணிக்கு விண்ணப் பித்த ஆசிரியர்கள், பலருக்கு உதவிப் பரீட்சகர் நியமனக் கடிதங்கள் உரிய காலப் பகுதியில் கிடைக்கவில்லை. 'தபால் திணைக்கள தபால் தரம் பிரிக் கும் ஊழியர்களின் சட்டப்படி வேலைப் போராட்டத்தினால்' தபால் கிடைப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனைப் பரீட்சைத் திணைக்களத்தின் கவனத்திற்கு ஆசிரியர் தொழிற்சங்கபிரமுகர்கள் கொண்டு வந்ததையடுத்து பரீட்சை ஆணையாளர், உதவிப் பரீட்சகர் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் இணைந்து கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை பிரதம பரீட்சகர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விடைத்தாள் மதிப்பீட்டுக் குழுவுக்கு பொறுப்பான பிரதம பரீட்சகருக்கு வழங்கப்பட்ட பட்டியலில் உதவிப்பரீட்சகரின் பெயர் இடம்பெற்றிருக்க வேண்டும்.

உதவி பரீட்சகரின் ஆள் அடையாளம், கல்வித் தகைமை, விடைத்தாள் மதிப்பீட்டு பணியின் அனுபவம், குறிப்பிட்ட பாடத்துறை உயர்தர வகுப்பில் கற்பித்த விபரம் என்பனவற்றை உறுதிப்படுத்திய பின்னர் விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான திசைமுகப்படுத்தலுக்கு உட்படுத்தி உரியமுறையில் உதவிப் பரீட்சகரை கடமையாற்ற வழிப்படுத்த வேண்டும். என பிரதம பரீட்சகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த.உயர்தர பரீட்சையின் முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் 14 நிலையங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# தலைவரின் வழிகாட்டுதலில் எங்களால் ஈழத்தை மீட்டெடுக்க முடியும் -ஜெயம்



(கிளிநொச்சி)

நிச்சயமாக எமது தலைவரின் வழிகாட் டுதலில் எங்களால் எமது ஈழத்தை மீட்டெடுக்கமுடியும்என்று கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் தெரிவித் துள் ளார்.

பளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூத்த தளபதி லெப்.கேணல் மகேந்தியின் இறுதி வணக்க நிகழ்வில் பங்குகொண்டு நினைவுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மகேந்தி மற்றப் போராளிகளுடனும், தளபதிகளுடனும் பழகும் போது மிகவும் அன்போடு இருப்பார். அத்தோடு தனது கடந்த கால இராணுவ ரீதியிலான செயற்பாடுகளில் தான் எவ்வாறு செயற்பட்டார் என்பதனைக் கூறுவார். அத்தோடு எதிர்காலத்தில் அவர் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கான விடயங்களை எம்மிடமிருந்து அறிந்து கொள்ளும் ஆர்வத்து டனும் பழகுவார். அவர் சண்டைக்கான பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மிக வேக மாகவும் சரியான ஈடுபாட்டுடனும் செயற்படுவார். அதனைப் பார்க்கும் போது அவர் களத்தில் எவ்வாறு செயற் படுவார் என்பது அப்போதே புரிந்துவிடும்.

யாழ்.குடாநாட்டை எதிரி ஆக்கிரமித்த பின் தனி ஒருவனாக மீண்டும் யாழ்.குடா நாட்டிற்கு சென்று எல்லாப் போராளிகளுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு எதிரி மீது பல தாக்கு தல்கள் நடத்தியிருக்கிறார்.

### தலைவரின் பாராட்டு

இதனைத் தொடர்ந்து அவரைத் தலைவர் பாராட்டி இன்னமும் திறமையாகச் செயற்பட வேண்டும் எனப் பல ஆயுதங்களையும் வழங்கியிருந்தார். அந்தளவிற்கு தலைவர் மகேந்தியின் செயல்திறன், விவேகம் போன்றவற்றின் தனித் திறமைகள் பற்றித் தெரிந்து வைத்துள்ளார்.

மகேந்தி விழுப்புண் அடைந்து நடக்க முடியாமல் இருந்தபோது கூட ஓயாத அலைகள்– 03 சமரில் சாவகச்சேரிப் பகுதியில் நடத்தப்பட்ட பதுங்கித் தாக்கும் சமர் ஒன்றுக்கு தன்னையும் தூக்கிச் செல்லுமாறு போராளிகளிடம் கேட்டுப் பேராளிகளுக்கு ஊக்கமளித்து அச்சமரில் பங்கேற்றவர்.

அந்தளவிற்கு எதிரியின் மேல் தாக்குதலை நடத்தவேண்டும் என்ற வேகம் கொண்டவர்.

இதற்கெல்லாம் என்ன காரணம் எனச் சிந்தித்துப் பார்ப்போமேயானால் எமது விடுதலை என்பது ஒவ்வொரு தமிழரினதும் கடமையிலும் செயற்பாட்டிலும் தான் தங்கியிருக்கிறது.

அந்தக் கடமையை மகேந்தி மிகத் திறன்படச் செய்து முடித்துள்ளார். இவரின் செயற்பாட்டின் மூலம் ஒவ்வொரு தமிழனும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். மகேந்தியைப் போன்று ஒவ்வொரு தமிழனும் செயற்பட வேண்டும். இன்று எதிரி என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றான் என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். நாங்கள் ஒவ்வொரு மாவீரர்களுக்கும் வணக்கம் செலுத்துவதோடு எமது கடமை முடிந்து விட்டதாக எண்ணக்கூடாது.

தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரையும் எதிரி புலிகளாகத் தான் பார்க்கின்றான்.

எனவே நாங்கள் தொடர்ந்தும் எம்மீது தாக்குதலை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை எதிரிக்கு வழங்குபவர்களாக இருக்கக் கூடாது. இனிவரப்போகும் யுத்தத்திலும் அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக சாவடைந்துபோவதை முடியுமானவரை தடுக்க முன்வரவேண்டும்.

உலகில் தமிழன் என்ற பெயருக்கு விடுதலைப் புலிகள் என்ற நாமம் சூட்டப்பட்டுள்ளது. அந்த நிலையை எமது தலைவர் ஏற்படுத்தியிருக்கின்றார்.

இன்று உலகின் எந்த ஒரு இடத்திலும் இலங்கைத் தமிழன் என்றால் விடுதலைப் புலியா என்று எண்ணு கின்ற அளவிற்கு எமது தலைமையின் கொள்கை மேலோங்கு கின்றது. நிச்சய மாக எமது தலைவரின் வழிகாட்டுதலில் எங்களால் எமது ஈழத்தை மீட்டெடுக்கமுடியும் என்றார். (கு)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, ஓடக்கரை பத்திர காளி அம்மன் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 6.00மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (க-9)

# 14மாதக் குழந்தைக்கு விஷமூட்டிய தந்தை

தனது 14மாதக் குழந்தைக்குப் பாலுடன் விஷத்தைக் கலந்து ஊட்டிய தந்தையொருவரைப் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

அத்துடன் இவர் தனது மனைவியையும் கோடரியால் தலையில் வெட்டிக் கொலை செய்யவும் முயற்சித்துள்ளார்.

கூரான கம்பியை சூடாக்கி அதனால் அவரைக் காயப்படுத்தியுமுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹல்தும்முல்லைப் பிட்டரத்மலை தோட்டத்தில் இக் கொடூர சம்பவம் இடம் பெற்றுள்ளது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தாயினதும் குழந்தையினதும் நிலைமை கவலைக்கிடமாகியுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித் துள்ளது. (கு)

# நியமனம்

வல்வெட்டித்துறை நகரசபைக்கு வருமான பரிசோதகர் ஒருவர் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ரீ.சிவாகரன் என்பவரே இவ்வாறு நியமனம் பெற்றுள்ளார். (க-52)

# உலகின் சிறந்த அணி

உலகக் கிண்ண கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு முன்னர் 23 வீரர்களைக் கொண்ட உலகின் சிறந்த அணி அறிவிக்கப்படவுள்ளது.

இம்முறை உலகக் கிண்ண போட்டியில் கலந்துகொண்டுள்ள 32 நாடுகளின் 736 வீரர்களில் இருந்து சிறந்த கால்பந்தாட்ட வீரர்களைக் கொண்ட அணி தேர்ந்தெடுக்கப்படவுள்ளது.

இந்த அணியை சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் 14 பேர் கொண்ட தொழில்நுட்பக் குழுவினர் தேர்ந்தெடுக்கவுள்ளனர். இக் குழுவில் முன்னாள் வீரர்கள், நடுவர்கள் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

போட்டியில் பங்கேற்கும் 32 நாடுகளிலிருந்து 50 வீரர்கள் இரண்டாவது சுற்றின் போது தேர்ந்தெடுக்கப்படுவர். இறுதிச் சுற்றின் போது 23 பேர் கொண்ட உலகின் சிறந்த அணி அறிவிக்கப்படவுள்ளது.

இதன்போது ஜுலை 9ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்து இறுதிப் போட்டிக்கு முன்னர் 23 பேர் கொண்ட உலக அணி அறிவிக்கப்பட்டு விருது வழங்கப்படும்.

தற்போதுள்ள உலக அணியில் ஜேர்மனியின் மைக்கல் பிளாக், பிரேசிலின் றொனால்டோ, றொனால்டினோ உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். (க-9)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் பேரவையில், தரம்II பதிவாளர் பதவிகளுக்கான ஆட்களை சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சைக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இப் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் சட்டம் தொடர்பிலான பட்டதாரிகள் அல்லது சட்டக் கல்லூரியில் இறுதிச் சட்டப்பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன் சட்டத்தரணியாக தொழில்புரிய தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இது வெளி விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் பொருந்தும்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் III தரத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள், அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் கீழ் குறிப்பிட்டுள்ள அலுவலர் கள், Iஆம் வகுப்பில் அல்லது அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள், சேவை யில் 8வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் கள்,

சேவையில் IIஆம் வகுப்பில் மூன்றாவது சம்பள ஏற்றத்தை அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள ஏற்றத்திற்கிணங்க சம்பளத்தினைப் பெறும் அலுவலர்கள் அல்லது அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றினைப் பெற்றுள்ள அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள், சேவையில் 03 வருடத்திற்கு குறையாத சேவைக் காலத்தை கொண்டுள்ள அலுவலர்கள், பதிவாளர் சேவையில் IIIஆம் தரத்தில் இரண்டாவது வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மற்றும் அத்தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தை மற்றும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் தினத்திற்கு கிட்டி ஐந்து (05) வருடங்களை முழுமையாக பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் உள்ளக விண்ணப்பதாரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவர்.

தொழில்பயிற்சி மற்றும் ஏனைய தகைமைகளாக, அரச மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அலுவல்கள் தொடர்பாக அனுபவமும், அறிவும், ஆங்கிலமொழி தொடர்பான அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் பரீட்சை கட்டணமாக 350 ரூபாவைச் செலுத்தி விண்ணப்ப படிவத்தை 2006.07.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில், பத்தரமுல்ல, பெலவத்தையில் அமைந்துள்ள பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். (க-7)

# இந்தோனேஷியாவில் தங்கியிருந்த இலங்கையர்களில் 43 பேர் தலைமறைவு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இந்தோனேஷியாவிற்குள் பிரவேசித்த 107 பேரில் இன்னமும் அகப்படாது இருக்கும் 43 இலங்கையர்களை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்தோனேஷிய குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் முகமட் இந்திரா தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவின் உல்லாசப் பிரயாண களிப்பிடமான சிஸருபா நகரிலுள்ள இரண்டு வீடுகளிலிருந்து இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்ததில் தங்களுடன் மேலும் 43 பேர் இந்தோனேஷியாவிற்கு வந்ததாக தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் கொழும்பிலும், யகார்த்தாவிலுமுள்ள குழுக்களிடமிருந்து சட்டவிரோதமாகப் பெற்றுக் கொண்ட விசாக்களைப் பயன்படுத்தியே கடந்த மாதம் இந்தோனேஷியாவிற்கு சென்றிருந்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான எஸ். பிரபாகரன் இந்தோனேஷியாவிலுள்ள ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தாமும் தமது குழுவினரும் சட்டரீதியாகவே இந்தோனேஷியாவிற்கு வந்ததாகக் கூறினார். (க-9)

தேவி மயம்

## மஹா கும்பாபிஷேகம்

பருத்தித்துறை ஓடக்கரை விதி அருள் தரு பத்திரகாளி அம்மன் திருக்கோயில் நவகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகம் 14.06.2006 புதன் கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும்.

**பிரதிஷ்டா பிரதம குரு**

பிரம்மஸ்ரீ –தானு–வாசுதேவ சிவாச்சாரியார் தேவ கான பூஷணம்.
(கொக்குவில் மணியர்பதி முருகன் கோயில் பிரதம குரு)

சுபம்

தர்மகர்த்தா
திருமதி புஸ்பாம்பிகை சிவபாலசிங்கம்

(441)

## சுன்னாகம் மயிலணி சிவன்கோவில்



## மஹா கும்பாபிஷேகம்



13.06.2006 செவ்வாய்க்கிழமை
(13ஆம் நாள்)

**விடிவருளே விஸ்வநாதா!**

ஆடும் மயிலின் அணிசேர் அரசே
அடியார்க் கெளியவரே
தேடித் தொழுவார் வினையைத் தேடித்
திடமாய்த் தீர்ப்பவரே
கூடும் கொடியோர் குறையை யுணர்ந்தே
கும்பிட்டா லுமையே
வீடும் அருளும் விமலா விசுவ
நாதா விடி வருளே!

*சிற்பி*

## இன்று ஒரு தகவல்

# பதவியும் பண்பும்

என்னுடன் படித்த ஒருவர் ஒரு நாள் மிகவும் கவலையுடன் வந்தார். என்ன விடயமென்று விசாரித்தேன் அவர் சொன்னார். "சிறுவயதில் என்னுடன் படித்த ஒருவன் இப்போது ஒரு பெரிய பதவியில் இருக்கிறான். சும்மா அவனைப்பார்த்து வாழ்த்துச் சொல்லிவிட்டு வரலாம் என்று போனேன் அவன் சரியாக முகம் கொடுத்துக்கூட பேசவில்லை. ஏதோ ஒரு அற்பப் புழுவைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தான். நான் போட்டிருக்கும் இந்த சாதாரண சட்டை கூட அவனுடைய கௌரவத்திற்கு இடைஞ்சல் என்பதுபோல் என்னிடம் பழகினான் அதுதான் மனம் ஒரு மாதிரி ஆகிவிட்டது. உங்களிடம் வந்தேன்" என்றார்.

கவலைப்படாதீர்கள் இன்று பல பேர் அப்படித்தான் ஆகிவிடுகிறார்கள் பதவி பெருகப் பெருக பண்பு குறைந்துவிடுகிறது. இடம்உயர உயர இதயம் குறுகிப் போய்விடுகிறது. இதயம் விசாலமானவர்களை இதிகாசங்களில் தான் பார்க்கமுடிகிறது என்றேன். என்ன அப்படிச் சொல்கிறீகள்? என்றார். "ஆமாம்" என்று சொல்லி அவரை உட்கார வைத்து குசேலர் கண்ணனைப் பார்க்கப் போன கதையைச் சொன்னேன்.

குசேலர் கிருஷ்ணரைப் பார்க்கப் போகிறார் அவல் கொண்டுபோகிறார் அதை ஒரு பழைய துணிமூட்டையில் கட்டியெடுத்துக்கொண்டு போகிறார். கிருஷ்ணன் அந்த அவல் மூட்டையை வாங்கிப்பிரிக்கிறார்.குசேலர் அதைப் பார்க்கிறார். அவரது மன்ம் மிகவும்சங்கடப்படுகிறது.நான் எங்கே? கிருஷ்ணன் எங்கே? நான் ஏழை...வறியவன் ! கிருஷ்ணனோ பேரரசன்...இறைவன் எனது அழுக்கான துணியை அவர் கையால் தொடலாமா? என்று நினைக்கிறார்.

ஆனால் கிருஷ்ணர் அவர் பாட்டுக்கு மூட்டையைப் பிரித்தார். அவலை எடுத்து வாயில் போட்டு அசைபோட ஆரம்பித்தார் கொஞ்ச நேரம் ஆனது... அவல் இன்னும்கொஞ்சம் மீதமிருந்தது. மூன்றாவது பிடி அவலை வாயில் போட்டுக்கொள்ளப்போனார் அந்த சமயம் பார்த்து ருக்மணி ஓடி வந்து கிருஷ்ணனின் கையைப் பிடித்துக்கொண்டதும் மிகவும் ஆச்சரியமாகிவிட்டது. நாம் கொண்டுவந்த இந்த அவலைக் கிருஷ்ணன் சாப்பிடுவது ருக்மணிக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது என்று நினைத்தார் குசேலர்.

ஆனால் கிருஷ்ணனுக்கு ருக்மணியின் இதயம் புரிந்தது. ருக்மணிக்கும் கிருஷ்ணனின் இதயம் புரிந்தது. குசேலர் ருக்மணியைப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக கிருஷ்ணன்பேசஆரம்பித்தார்.ருக்மணியைப் பார்த்துச் சொ்ல்கிறார். "எதற்காக நீ என் கையைத்தடுத்து நிறுத்தினாய்? நான் குசேலனின்சேவகன்.அவர் கொண்டு வந்த அவலைநான்ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்றார்.

இதற்கு ருக்மணி சொன்னபதில் என்ன தெரியுமா? "கிருஷ்ணா நீ குசேலருக்குத் தொண்டன். நான் உனக்குத் தொண்டுசெய்பவள் அந்த உரிமை காரணமாக எனக்கு இந்த அவலில் பங்குவேண்டாமா? எனக்குள்ள பங்கை நான் கேட்கிறேன்" இதுதான் ருக்மணியின் பதில்.

ஆனமிக எண்ணங்கள் எந்த அளவுக்கு விசாலத் தன்மை வாய்ந்தவை என்பதை நாம்புரிந்துகொள்வதற்காக இந்தச்சம்பவத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பதவி உயரும்போது பண்பும் உயரவேண்டும். பழைய நட்புகளை மறந்துவிடக்கூடாது. இந்தக் காலத்தில் சாதாரண உயர்வையே மிகப் பெருமையாக நினைப்பவர்களும உண்டு.

ஒருவர் சொன்னார் "நான் கடந்த ஒரு மாதகாலத்தில் வாழ்வில் மிகவும் உயர்ந்திருக்கிறேன்" என்றார். "எப்படி?" என்றேன்.'போன மாதம் காலில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் சோந்தேன் அப்போது மூன்றாவது மாடியில் படுத்திருந்தேன். இப்போது ஏழாவது மாடிக்கு மாற்றியிருக்கிறார்கள்' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கிராமிய வங்கிகளை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை

(கொழும்பு)

கிராமிய வங்கிகளை அபிவிருத்தி செய்து அதன் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கிராமிய வங்கிகளின் நிதிகள் ஆதாயமற்ற நிதி நிறுவனங்களில் வைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் இவ் வங்கிகள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றன என்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கிராமிய வங்கிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கி வருவதன் காரணமாக இந்த வங்கிகளின் வாடிக்கையாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்ளுகின்றார்கள் என்றும் ஆணையாளர் கூறினார்

இதனால் கூட்டுறவுச் சங்கங்களைப் பராமரிக்கும் பணிகளை துரிதப்படுத்துவதற்கும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கிராமிய வங்கிகளை விடுவித்து சுயமாக இயங்கச் செய்வதற்கும் அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்வுள்ளது. இவ்விதம் சுயமாக இயங்கும் கிராமிய வங்கிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியை வழங்குமென்றும் கூட்டுறவு ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# சிறுவர்கள் கொலை செய்யப்படுவதைக் கண்டும் சர்வதேச ம.உ.அமைப்புக்கள்மௌனிப்பது ஏன்?

## விடுதலைப்புலிகள் கேள்வி

(கொழும்பு)

அரச படைகளினால் 24 சிறுவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் சர்வதேசமனித உரிமை அமைப்புக்கள் மௌனமாகஇருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சிறுவர்களைபடையில் சேர்ப்பதாக இச்சர்வதேச உரிமை அமைப்புக்கள், விடுதலைப் புலிகள்மீது தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வந்தன.

ஆனால் இன்றைய நிலையில் இலங்கை இனப் பிரச்சினையால் அண்மைக்காலமாகசிறுவர்கள் கொலை செய்யப்படுவதைக் கண்டிப்பதற்கு இச் சர்வ தேச அமைப்புக்கள் தவறிவிட்டன என விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சிறுவர்களின் நலன்களில் அக்கறை செலுத்துவதாக கூறிக்கொள்ளும் இச்சர்வதேச உரிமை நிறுவனங்கள், தற்போது நடைபெறும் சிறுவர்களின் ஒவ்வொரு படுகொலையின் பின்னரும் தமது கண்டனத்தை வலியுறுத்திக் கூறியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் தொடர்ந்தும் மௌனமாகவே இருக்கின்றனர் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மைய நாட்களில் படுகொலை செய்யப்பட்ட 24 சிறுவர்களின் பெயர்களையும் புலிகள் பட்டியல்படுத்தியுள்ளனர். இதில் அண்மையில் மன்னார் வங்காலையில் கொடூரமா க படுகொலைசெய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்களும் அடங்குகின்றனர்.

கடந்த மாதமும் யுனிசெவ் அமைப்பு விடுதலைப் புலிகள் சிறுவரை படையில்சேர்ப்பதாக குற்றம்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## மாகாண சபை உறுப்பினர்கள் முத்திரையைப் பயன்படுத்தி கடிதங்களை அனுப்பலாம்

(கொழும்பு)

மாகாண சபை உறுப்பினர்கள் இதுவரை அரச தலைப்புடன் கடிதங்களை அனுப்பி வந்த முறையை இரத்துச் செய்து முத்திரையைப்பயன்படுத்தும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முத்திரையைப் பயன்படுத்தும் முறையை அமுலுக்கு கொண்டுவருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்துள் ளார்.

அடுத்தவருடம் ஜனவரிமாதம் முதல் இத்திட்டம் அமுல் படுத்தப்படும் என்று தெரிவித்த அமைச்சர் வருடாந்தம் உறுப்பினர் ஒருவருக்கு 24 ஆயிரம் ரூபாய் பெறுமதியான முத்திரைகள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (க-9)

## கண்டிப் போகம்பர சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை

(கண்டி)

கண்டிப் போகம் பல சிறைச்சாலையை நகரில் இருந்து வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் வஜிரகுணவர்த்தனவை பணித்துள்ளார் என மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை கண்டியில் சந்தித்த போதே ஜனாதிபதி தனக்கு இதனைத் தெரிவித்ததாக ஆறுதல் தெரிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டு முதல் போகம்பல சிறைச் சாலையை பல்லேகல பிரதேசத்திற்கு மாற்றுவதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டபோதும் அதுகுறித்து நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் இவ்வருட இறுதிக்குள் சிறைச்சாலை பல்லேகம பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதுடன் இதற்கான நிதிகளை பெற்றுக்கொடுக்கவோ ஜனாதிபதிநடவடிக்கை எடுத்துள்ளார் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். (க-9)

# சுவிஸ் நினைவு வணக்க கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகள்











சுவிஸ் சூரிச் நகரில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட துணைத்தளபதி கேணல் றமணன், தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் மகேந்தி ஆகியோரின் நினைவு வணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பங்கேற்று வணக்கம் செலுத்தியுள்ளனர்.

இவ்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் ஆரம்பமானது. அரசியல்துறைப்பொறுபாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப்பொறுப்பாளர் பா. நடேசன் ஆகியோர் ஈகச்சுடரேற்றி, உருவப்படங்களுக்கு மலர் வணக்கம் செலுத்தினர்.

## கறுப்புப்பட்டிப்போராட்டத்தையும் ஆரம்பித்துவைத்தனர்

இதே வேளை சுவிஸ் சூரிச் நகரில் விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை யைக் கண்டித்து நேற்றுமுதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை கடைப்பிடிக்கப்பட வுள்ள கறுப்புப்பட்டி வாரத்தை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் உத்தியோக பூர்வமாக நேற்று ஆரம்பித்து வைத்தனர்.

கறுப்புப்பட்டியை சு.ப தமிழ் செல்வனுக்கு சூரிச் மாநில பொறுப்பாளர் அணிவிக்க, காவல்துறைப் பொறுப் பாளர் பா. நடேசனுக்கு சுவிஸ் தமிழர் பேரவைத் தலைவர் அணிவித்தார்.

## உரிமைக்குரல் ஒளி நாடாவெளியீடு

சுவிசில் நடைபெற்ற ''உரிமைக்குரல்'' நிகழ்வின் ஒளிநாடாவும் இந்நிகழ்வில்வெளியிடப்பட்டு வைக்கப் பட்டது.

''உரிமைக்குரல்'' ஒளிநாடாவை கிருஸ்ணா அம்பலவாணர் வெளியிட்டு வைக்க சு.ப தமிழ்செல்வன், பா. நடேசன், புலித்தேவன் ஆகியோர்பெற்றுக் கொண்டனர்.(க)




## பெக்கமுக்கே கோல் பெருமை

இங்கிலாந்து-பராகுவே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் போது, அடித்த ஒரே கோலை யாரது கணக்கில் கொண்டு வருவது என்ற விவாதம் எழுந்துள்ளது.

பிராங் போர்ட்டில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 'பி' பிரிவு லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் தலைவர் டேவிட் பெக்கம் 3வது நிமிடத்தில் அடித்த கோல், பராகுவே அணி வீரர் கார்லஸ் கமாரா வின் தலையில்பட்டு 'சேம் சைட்' (தனது அணிக்கே) கோலாகியது. அதனாலேயே இங்கிலாந்து வெற்றிபெற்றது குறிப் பிடத்தக்கது.

இந்நிலையில், அதை சேம்சைட்கோல் எனக் கூறமுடியாது என்கிறது விதி முறை. அதாவது, தாக்கும் அணியில் உள்ள வீரர்களில் யார் கடைசியாகப் பந்தைத் தள்ளினாரோ அவரது கணக்கிலேயே அந்த கோல் சேரும் என்கிறது.

இதையடுத்து அதன் ஒளிப் பதிவை ஆய்வு செய்த சர்வதேச சம்மேளனத்தின் தொழில்நுட்பக்குழு. அதனடிப்படையில் அந்த கோல் பெக்கமின் கணக்கிலேயே சேரும் எனத் தெரிவித்துள்ளது.

தவிர, அந்தக் கோல் அடிக்கப்பட்ட நேரத்தையும் ஆய்வு செய்த குழு, 4வது நிமிடத்திலேயே அந்த நிகழ்வு நடைபெற்றது எனத் தெரிவித்துள்ளது.

சில நேரங்களில் ஓர் அணிவீரர் பந்தைப் பாதுகாப்பதற்காக தனது கோல் கீப்பருக்குத் தள்ளும் போது, பந்து திடீரென திசை மாறி கோலாவது உண்டு. அம் மாதிரி அப்பட்டமாகத்தெரிந்தால்மட்டுமே'சேம் சைட் கோல்' எனக்கூறப்படும். மற்றபடி மற்றொரு வீரர் பந்தைத் தள்ளும்போது அது எதிரணி வீரரின் தலையிலோ அல்லது காலிலோ பட்டு கோலாகும் பட்சத்தில், யார் கடைசியாக பந்தைத் தொட்டாரோ அவரது கணக்கிலேசேர்க்கப்படும். சேம்சைட்கோலைக் குறைப்பதற்கான முயற்சியே இது.

## அரசியல்வாதி போல் நடித்தார் நெதர்லாந்து வீரர்

செர்பியா அணிக்கு எதிரான ஆட்டத்தில் நெதர்லாந்து வீரர் ராப்பென் பந்துடன் கோலை நோக்கி முன்னேறிய போது செர்பிய வீரர் காவ்கானிக் விதிமுறைக்கு மாறாக முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டு அதனைத் தடுத்தார். இதனைத் தொடர்ந்து நடுவர் மஞ்சள் அட்டையை எடுக்க முற்பட்டார். உடனே பதறிய காவ்கானிக் அரசியல்வாதி போல் நடுவரை நோக்கி பெரும் கும்பிடு போட்டார். இந்த அபார கும்பீட்டால் மனம் மாறிய நடுவர் நெதர்லாந்துக்கு 'பிரிகிக்' வாய்ப்பு கொடுத்தார். மஞ்சள் அட்டை எதுவும் காட்டவில்லை. உடனே காவ்கானிக் நடுவருக்கு கைகொடுத்து நன்றிதெரிவித் தார்.

## சாதனை நிகழ்த்துவர்ரா றொனாட்டோ

தற்பொழுது நடைபெற்று வரும் உலகக்கிண்ண உதைப் பந்தாட்டத் தொடரில் ஆடிவரும் வீரர்களில் பிரேஸில் வீரர் றொனால்டோ ஜாம்பவனாகத் திகழ்கின்றார்.

இது அவருக்கு மூன்றாவது உலகக் கிண்ணத் தொடராகும்.

உலகக் கோப்பைப் போட்டிகளில் அவர் இதுவரை 12 கோல்கள் அடித்துள்ளார். இதில் 14 கோல்கள் அடித்ததே இது வரை சாதனையாகவுள்ளது.

இதற்கு சொந்தக்காரர் ஜேர்மனி வீரர் ஜெர்ட் முல்லர். அவரது சாதனையே றொனால்டோ இந்தத்தடவை முறியடித்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது குறித்து றொனால்டோ இவ்வாறு கூறுகின்றார்.

தனிப்பட்ட முறையில் இந்தச் சாதனை முக்கியமாகவிருக்கலாம். ஆனால் அதை விட எனது அணி ஜெயிக்க வேண்டும் என்பது முக்கியமானது.

எனவே எங்கள் அணி வெற்றி பெற வேண்டும் என்பது முக்கியமானது. எனவே எங்கள் அணி வெற்றி பெற வேண்டும் என்பதில் தான் எனது முழு கவனமும் இருக்கும்.

சாதனை எனக்கு மகிழ்ச்சியே என்றாலும் அதற்கு முன்னுரிமை கொடுக்க மாட்டேன் என றொனால்டோ கூறினார்.

## இங்கிலாந்து ரசிகர்கள் கைது

பராகுவேக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 1-0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டி முடிந்ததும் இங்கிலாந்து ரசிகர்கள் சிலர் பராகுவே ரசிகர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர். இது தொடர்பாக இங்கிலாந்து ரசிகர்கள் 20பேர் கைது.

## குரோஷியா சமநிலை செய்தாலே போதும்

உலகக் கோப்பை போட்டியில் இன்று நடைபெறும் கடைசி ஆட்டத்தில் பிரேசில் - குரோஷியா அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டம் குறித்து குரோஷியா அணி பயிற்சியாளர் சாட்கோ கிராஞ்சர் கூறுகையில், ''உலகில் 99 சதவீதம் பேர் பிரேசில் தான் வெல்லும் என்று சொல்கிறார்கள். எனவே நாங்கள் இந்தப் போட்டியில் சம நிலை செய்தாலே பெரிய விஷயம். எனவே நாங்கள் சமநிலை செய்ய போராடு வோம்'' என்று தெரிவித்துள்ளார்.

## நெதர்லாந்து இலகு வெற்றி

மூன்றாவது நாள் இரண்டாவது போட்டியில் நெதர்லாந்து-செர்பியா அன்ட் மொன்டினிக்ரோ ஆகிய அணிகள் மோதின.

வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கின. ஆர்ஜென் ராபன் திரில் கோல் அடிக்க நெதர்லாந்து அணி, செர்பியாமான்டினிக் ரோவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.



ஜேர்மனியில் 18வது உலகக் கோப்பை உதை பந்தாட்டத் தொடரில் 'சி' பிரிவில் ஆர்ஜென்டினா, ஐவரிகோஸ்ட், செர்பியா, நெதர்லாந்து ஆகிய முன்னணி அணிகள் இடம்பெற, 'குரூப் ஒவ் டெத்' என வர்ணிக்கப்பட்டது.

ஆட்டம் ஆரம்பமாகி முதல் நிமிடத்தில் நெதர்லாந்துக்கு 'பீறி-கிக்' வாய்ப்புக் கிடைத்தது. வெஸ்லி ஸ்னிடர் பந்தை அடிக்க, அதைத் தலையால் முட்டி அர்ஜென் ராபன் வலைக்குள் தள்ளப் பார்த்தார். ஆனால் செர்பிய கோல்கீப்பர் டிராகஸ்லாவ் ஜவ்ரிக் துடிப்பாக தடுத்துவிட எதிர்ப்பு தகர்ந்தது. பந்து பெரும்பாலும நெதர்லாந்து வசம் இருந்தபோதும் செர்பிய தற்காப்புப் பகுதியை அவ்வளவு எளிதாக தகர்க்க முடியவில்லை. ஆட்டத்தின் 18வது நிமிடத்தில் அர்ஜென் ராபன் அற்புத ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தற்காப்பு பகுதியில் இருந்து ஜான் ஷெய்டிங்கா அடித்த நீண்ட அடியை மைதானத்தின் மையப் பகுதியில்பெற்றராபன், மின்னல்வேகத்தில் கொண்டு சென்றார். பெனால்டி ஏரியாவை நெருங்க, நெருங்க டென்ஷன் எகிறியது. தனி ஆளாக பந்தை எடுத்து வந்த இவர் செர்பிய கோல்கீப்பரை ஏமாற்றி அற்புத கோல் அடித்தார். இவர் உற்சாகத்தில் மைதானம் முழுவதும் சுற்றிவர, நெதர்லாந்து 1-0 என்ற முன்னிலை பெற்றது.

21ஆவது நிமிடத்தில் மீண்டும் ராபன் அசத்தினார். இம்முறை பந்துகோல் போஸ்டில் பட்டு விலகிச்சென்றது. 37வது நிமிடத்திலும் இவர் அதிவேகமாக பந்தைக்கொண்டு வந்தார். ஆனால் செர்பிய தற்காப்பு வீரர்கள் பந்தை த[illegible] சென்றுவிட, முதல் பாதி முடிவில் நெதர்லாந்து முன்னிலை(1-0) தொடர்ந்தது. இரண்டாவது பாதியிலும் ராபன் ஒன் -மேன் வேடிக்கை காட்டினார். தனி நபராக ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தினார். 47ஆவது நிமிடத்தில் செர்பியாவின் ஒக்னியன் கொராமேன் கோல் போஸ்ட் அருகே பந்தைக் கொண்டு சென்றபோது ஆட்டம் சமநிலைக்கு வந்துவிடுமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. இம் முறையும் இவர் வாய்ப்பை நழுவவிட்டார். 62வது நிமிடத்தில் ஆன்டரி ஓஜர் பந்தை கையால் தொட்டதாககூறிசெர்பிய வீரர்கள் பெனால்டி கேட்டனர். இதை நடுவர் நிராகரித்து விட்டார். இறுதியில் நெதர்லாந்து 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, 3புள்ளிகளை பெற்றுக் கொண்டது.

## மெக்சிக்கோவின் முயற்சிக்கு பலன் கிடைத்தது

நியூரம்பாக் உலகக் கோப்பை உதை பந்தாட்டத் தொடரில் மெக்சிக்கோ அணி, ஈரானை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. முதல் பாதியில் அசத்திய ஈரான், இரண்டாவது பாதியில் சொதப்பியது. இரண்டு கோல் அடித்த ஓமர் பிராவோ மெக்சிக்கோவின் வெற்றி நாயகனாக வலம் வந்தார்.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் 7வது போட்டி நேற்று முன்தினம் நடந்த டி பிரிவு லீக் போட்டியில் மெக்சிக்கோ, ஆசியாவின் ஈரான் அணிகள் மோதின. ஆட்டத்தை மெக்சிக்கோ வழக்கம் போல் அதிரடியாக ஆரம்பித்தது. இந்த அணியின் வீரர்கள் கோல் அடிக்க உற்சாகத்துடன் போராடினார்கள். ஆட்டத்தின் 28வது நிமிடத்தில் மெக்சிக்கோவுக்கு பிரி-கிக் வாய்ப்புக் கிடைத்தது. பந்தை பாவல் 'பர்டோ அடிக்க, அதைப் பெற்ற ஓமர் பிராவோ அழகான கோலாக மாற்ற மெக்சிக்கோ 1-0 என்ற முன்னிலை பெற்றது. இந்த சந்தோஷம் அதிகநேரம் நீடிக்கவில்லை. ஆசிய மானம் காக்க போராடிய ஈரான், 36வது நிமிடத்தில் கிடைத்த கோர்னர் வாய்ப்பை அருமையாகப் பயன்படுத்தியது. இந்த அணியின் கொல்மொகமதி சூப்பர் கோல் அடிக்க ஆட்டம் 1-1 என்ற சமநிலைக்கு வந்தது. இதேநிலை முதல் பாதி முடியும் வரை நீடித்தது. இரண்டாவது பாதியில் ஈரான் வீரர்கள் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். டிரா செய்தாலே போதும் என்ற எண்ணத்துடன் காணப்பட்டனர். அதேநேரத்தில் வெற்றிக்



காக போராடிய மெக்சிக்கோ, கடைசி 15 நிமிடத்தை தன்வசம் எடுத்துக் கொண்டது. 76வது நிமிடத்தில் ஈரான் கோல் கீப்பர் இப்ராகிம் மிர்சாபூர் பதற்றமடைய ஓமர் பிராவோ மீண்டும் ஒரு பிரமாத கோல் அடித்தார். அடுத்து 79வது நிமிடத்தில் இன்னொரு மெக்சிக்கோ தாக்குதல். இம்முறை அன்டோனியோ ஜின்கா புல்லட் வேகத்தில் தலையால் முட்டி ஒருகோல் அடிக்க, மெக்சிக்கோ அணி 3-1என்ற கணக்கில் ஈரானை வீழ்த்தியது. 3புள்ளிகளையும் முழுமையாகப் பெற்றது.

## போர்த்துக்கல்லின் வெற்றி ஆரம்பம்

போர்த்துக்கல் கொலோன் உலகக் கோப்பை கால்பந்து தொடரை அனுபவ அணி வெற்றியுடன் ஆரம்பித்து தனது முதல் போட்டியில் அறிமுக அங்கோலாவை 1-0என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஜேர்மனியின் கொலோனில் நேற்று முன் தினம் நடந்த டி பிரிவு லீக் போட்டியில் போர்த்துக்கல்-அங்கோவா அணிகள் மோதின. ஆட்டத்தின் 4வது நிமிடத்தில் போர்த்துக்கல்லின் சூப்பர் ஸ்டார் லூயிஸ் பிகோ, பந்தை சக வீரரான பாலேட்டாவுக்கு அழகாக பாஸ் செய்தார். அதை அப்படியே தாழ்வாக அடித்து அருமையான கோலாக்கினார் பாலேட்டா. இது போர்த்துக்கல் அணிக்காக இவர் அடிக்கும் 47 வது கோலாக அமைந்தது.

முதல் பாதி முடியும் நேரத்தில் மற்றொரு நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ நல்ல வாய்ப்பை நழுவ விடதபோர்த்தக்கல் முன்னிலையில் (1-0)மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

இரண்டாவது பாதியில் அங்கோலா வீரர்கள் கோல் அடிக்க கடுமையாகப் போராடினர். ஆனாலும் போர்த்துக்கல்லின் தற்காப்பு ஆட்டத்தை தகர்க்க முடியவில்லை. பலமுறை கோல் வாய்ப்புக்களை போர்த்துக்கல் வீரர்கள் தவறவிட்டனர். இறுதியில் போர்த்துக்கல் அணி 1-0 என்ற கோல் கணக்கில் அங்கோலாவை வீழ்த்தி, 3புள்ளிகளை பெற்றது.

## இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்


| அணிகள் | இடம் | நேரம் (இரவு) |
| --- | --- | --- |
| கொரியா-டோகா | வைப்ஜிக் | 6.30 |
| பிரான்ஸ்-சுவிட்சர்லாந்து | ஸ்டுட்காட் | 9.30 |
| பிரேசில்-குரோஷியா | பேர்லின் | 12.30 நள்ளிரவு |


# கணினிக் கல்விப் பகுதி

(05)

***அடுத்ததாக வந்துள்ள இமெயிலைப் பார்வையிடுவது எப்படி எனப் பார்ப்போம்.***

மெயில் அனுப்புவதற்கு கொம்போஸ் பகுதியை கிளிக் செய்வது போல வந்துள்ள மெயிலைப் பார்வையிட **Inbox** என்ற பகுதியை கிளிக் செய்தால் இன்பொக்ஸ் பகுதி திறக்கப்படும். இதிலே யாரால் மெயில் அனுப்பப்பட்டுள்ளது, எப்பொழுது அனுப்பப்பட்டுள்ளது போன்ற விபரங்களை அங்கே காண்பிக்கும். பின்னர் தேவையான மெயில் மீது மவுஸ் பொயின்டரைக் கொண்டு சென்றால் மவுஸ் பொயின்டர் கை அடையாளமாக மாறிவிடும் பின் கிளிக் செய்ததும் அனுப்பப்பட்ட செய்தியைக் காண்பிக்கும். இதிலே யாராலே மெயில் அனுப்பபபட்டது எப்பொழுது அனுப்பப்பட்டுள்ளது போன்ற விபரங்களையெல்லாம் காணலாம். வந்த மெயில் வாசித்த பின் அனுப்பியவருக்கு **Reply Mail** அனுப்பலாம். அல்லது அந்த மெயில் தேவையில்லை யெனில் அழித்துவிடலாம். அல்லது வேறுயாருக்கும் **Forward** செய்யலாம்.




***வந்துள்ள மெயில்களை படித்து முடித்தபின் கீழ்க்காணும் பணகளைச் செய்யலாம்.***

**1. Reply :** வந்த மெயிலுக்கான பதிலை அனுப்ப இச்செயற்பாடு பெரிதும் உதவுகிறது. To பகுதியில் இமெயில் முகவரிக்கு முன் **Re** என்று வருவதைக் காணலாம். **Re** என்பது **Reply** ஐக் குறிக்கும்.

**2. Forward :** வந்துள்ள மெயிலை இன்னொருவருக்கு அனுப்பி வைக்க லாம். தேவையேற்படின் மட்டுமே பயன்படுத்தவும்.

**3. Delete :** இவ்பட்டினை கிளிக் செய்வதன் மூலம் மெயிலை அழித்து விடலாம். **Inbox** பகுதியில் தேவையில்லா மெயில்களுக்கு முன்னுள்ள செக் பொக்சில் சரிக் குறியிட்டு அதாவது கிளிக் செய்து விட்டு **Delete** என்பதை தெரிவுசெய்ததும் மெயில அழிந்துவிடும்.




**4. Add to Address book** – வந்துள்ள மடலை அனுப்பியவரின முகவரியை உங்கள் முகவரிப் புத்தகத்தில் சேர்த்து விடும. இதனால் அவருக்கு எதி காலத்தில இமெயில் அனுப்பும் போது அவருடைய முகவரி ஞாபகம் வைத்திருக்க தேவையில்லை. முதல் எழுத்தை ரைப் செய்ததும் (நாம் பதிந்து வைத்திருப்பவரின்) முகவரியை காண்பிக்கும்.

**5. Print** - எமக்கு வந்துள்ள மெயிலை திரையில் படித்த பிறகு தேவையானது எனில் காகிதத்தில் அச்சிட்டுக் கொள்ளலாம். இதற்கு **Printer** இருக்க வேண்டும்.

### *இமெயிலில் உள்ள Folder கள்*

- **Inbox** - இந்த போல்டரில் வந்துள்ள இமெயில்கள் சேமித்து வைக்கப் படும்.
- **Send items** – ஏற்கனவே இமெயில் அனுப்பப்பட்ட தகவல்கள் இந்தப் போல்டரில் தான் சேமிக்கப்படும்.
- **Draft** – முழுமையடையாமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கடிதங்கள் இந்தப் போல்டரில் தான் இருக்கும். அதாவது முழுமை பெறதா கடிதங்களை ரைப் செய்து சேமிக்குமிடம்.
- **Trash** - இந்த போல்டரானது அழித்த மெயில்களை 24 மணி நேரம் அதாவது ஒரு நாள் இந்த போல்டரில் சேமித்துவைத்திருக்கும். ஆனால் நேற்று முன் தினம் அழித்த மெயில்களை இன்று பெறமுடியாது.

*கணினி ஒன்று Assemble செய்ய தேவையான வன்பொருட்கள்*

1. Processor
2. Hard Disk
3. Floppy Disc
4. VGA Card
5. Sound Crad
6. Memory
7. CD ROM
8. Power Supply Unit
9. Mother Board
10. UPS
11. Casing
12. TV Tuner /FM Card
13. Monitor
14. Mouse
15. Keyboard
16. Speaker
17. Data Cables and BUS

## கணினிச் செய்திகள்

### *கணினிப் பாவனையாளருக்கு சில குறிப்புக்கள்*

- நீண்ட நேரமாக கணினியை பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது உடலில் வலி அல்லது அமைதியற்ற நிலை ஏற்பட்டால் சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்னர் பணியைத் தொடரவும்.
- குறைந்த பட்சம் ஒரு மணி நேரத்திற்கொரு முறையாவது இருக்கையிலிருந்து எழுந்து சிறிது தூரம் நடக்கவும். நாம் இருக்கையிலிக்கும்போது பாதங்கள் தரையில் படுமாறும் மற்றும் முதுகுப் பகுதி இருக்கையின் பின்புறத்தில் சாய்ந்தவாறு அதாவது நேராக அமர்ந்து கொள்ளவும்.
- Keyboard இருக்கும் உயரத்திற்கு முழங்கையை வைத்துக் கொள்ளுங்கள். Mouse ஐ கீபோர்ட்டிற்கருகில் வைத்திருங்கள்.
- கணினித் திரையை எமது கண்கள் நேராக பார்க்குமாறு வைத்திருங்கள்.
- ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கொரு முறையாவது கண்களுக்கு 20 நொடிகள் ஓய்வு கொடுங்கள். (20 : 20)
- அதிகளவு வெளிச்சமுள்ள அல்லது குறைந்த மங்கலான ஒளி விழும் இடத்திலும் கணினியை வைக்கக்கூடாது.
- Monitor இலிருந்து குறைந்தது ஒரு அடி தூரம் தள்ளியிருக்க வேண்டும். (20 - 25 அங்குலம்.)
- Glare பில்டரைப் பயன்படுத்துங்கள்.
- அவ்வப்போது கண்களை சிமிட்டி தூரத்திலுள்ள பொருட்களையும் பார்த்து கண்களுக்கு ஓய்வு கொடுங்கள்.
- மொனிட்டரின் அதிகளவு Brightness இருந்தால் தலைவலி ஏற்பட வாய்ப்புண்டு.
- Monitor ஐ எப்பொழுதும் சுத்தமாக வைத்திருங்கள். தரம் குறைந்த மொனிட்டர், குறைந்த ரிசொல்யூசன், குறைந்த பிக்சல் எண்ணிக்கை மற்றும் அதிக கான்ராஸ்ட் கலர்களை பயன்படுத்துவதால் கண்களுக்கு வலி ஏற்பட வாய்ப்புண்டு.
- கணினியுடைய ரி.ஃப்ரஸ் ரேட் 75 - 85 Hz இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். குறைவாகயிருந்தால் கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.
- மூக்குக்கண்ணாடி அணிபவர்கள் அதில் அன்ட்ரி ரிப்ளெக்ஷன் கோட உடையதாக அணியவேண்டும்.

## இந்தவார இணையத்தளம்

BIT

**www.bit.lk** கொழும்பு பல்கலைகழகத்தினால் நடாத்தப்படும் **Bachelor of Information Technology - BIT** என்ற தகவல் தொழிநுட்ப பட்டப்படிப்பு சம்பந்தபட்ட சகல விபரங்களையும **bit.lk** என்ற இணையத்தளத்திலே பெற்றுக்கொள்ளலாம். **6 Semester** களை இப்பாடநெறி கொண்டுள்ளது. இத்தளத்தில் ஆறு செமிஸ்டரின் போதும் போதிக்கப்படும் அலகுகளின் விபரங்களும், கட்டண விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.


**BIT** கற்கை நெறியைத் தொடர விரும்புவோர் ஒருமுறை **bit.lk** தளத்திற்கு விசிட் செய்யுங்களேன்.




## தமிழில் Google.lk

இணையத்தில் கூகிள் பயன்பாடானது மிகவும் முக்கியமானதொன்றாக விளங்குகிறது. அதாவது தேடல் இயந திரம் என்றாலே கூகிள்தான். இன்று தனது ஆதிக்கத்தை உலகம் முழுவ துமே செலுத்தி வருகிறது எனறு சொல்லலாம்.

அந்தவகையில் இலங்கையிலும் தனது செயற்பாட்டை செயற்படுத்தி வரு கிறது.




நமது தாய் மொழியிலே **Google.com** ஐ காணலாம் தமிழ் மொழியிலே கூகிளின் செயற்பாடடைப் பெற்றுக கொள்ள **www. google.lk** என்ற தளத்தை நாடவும் இது இலங்கையிலுள்ள கூகிளின் சேவராகும் **(Server).**

# காதில் ஏற்படும் நோய்களும் தலைச்சுற்றலுக்கு காரணமாகிறது

காதுக்கு இரண்டு வேலைகள் உள்ளன.

1 கேள்வி (Hearing)

2. உடலைச் சமநிலையில் வைத்திருத்தல் (Equilibrium) எனவே காது நோய்கள் காரணமாகவும் தலை சுற்றல் மயக்கம் ஏற்படலாம்.

தலை சுற்றல், மயக்கம் என்றாலே நரம்பியல் கோளாறு என்றுதான் பலரும் நினைப் பார்கள். இது தவறு. ஏனெனில் உள்கா தில் உள்ள சமநிலைக் கேந்திரம் (Labyrinth) என்ற உறுப்பு காரணமாகவும் தலை சுற்றல் ஏற்படலாம்.

*முக்கியமான மூன்று உறுப்புகள்*

நம் உடலின் சமநிலையைப் பராமரிப்பதில் மூன்று உறுப்புகளின் பங்கு மிக முக்கியமானது. 1. உள் காதில் உள்ள சம நிலைக் கேந்திரம் (லேப்ரிந்த்) 2 கண் அல்லது பார்வை 3. தோல், தசை, மூட்டுகளிலிருந்து ஏற்படும் உணர்வு அலைகள். இந்த மூன்றில் ஏதாவது ஒன்றில் பிரச்சினை ஏற்பட்டாலும் தலைசுற்றல், மயக்கம் ஏற்படுகிறது. மேலும் உயர் ரத்த அழுத்தம் குறை ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உட்பட 100க் கும் மேற்பட்ட காரணங்களாலும் தலை சுற்றல், மயக்கம் ஏற்படவாய்ப்புண்டு.

காதுப் பிரச்சினை காரணமாகவே 80 சதவீதம் பேருக்கு தலைசுற்றல் ஏற்படுகிறது. மீதமுள்ள 20 சதவீதம் பேருக்கே நரம்பியல் காரணமாக தலை சுற்றல் ஏற்படுகிறது. ரத்தசோகை காரணமாகவும் தலை சுற்றல் ஏற்படலாம். காது காரணமாக தலை சுற்றல் ஏற்படும் நிலையில் சமநிலை கெடுவதால் உருவாகும். இதனால் தன்னைத் தானே சுற்றுவதுபோல் தோன்றும். அல்லது சுற்றியுள்ள பொருள்கள் சுற்றுவது போல் தோன்றும்.

*உள்காதும் தலைசுற்றலும்*

ஏற்கனவே சொன்னதுபோல் உள்காதில் உள்ள சமநிலைக் கேந்திரத்தில் கோளாறு ஏற்படும்போது உடனடியாக தலை சுற்றல் ஏற்படும். உள்காதில் ஏற்படும் நோய்களில் மீனியர்ஸ் நோய் (Meniere's Disease) முக்கிய மானது. இந்நோய் மீனியர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவரது கண்டுபிடிப்புக்கு முன்பு வரை மூளையினால் தான் தலை சுற்றல் ஏற்படுகிறது என மருத்துவ உலகம் நம்பி வந்தது. ஆனால் மயக்க நோயாளி ஒருவரின் பிணத்தை பிரதே பரிசோதனை செய்த போது அவரது உட்காதில் நோயின் தன்மை இருந்ததை மீனி யர் கண்டுபிடித்தார்.

இதையடுத்து இறந்தவரின் தலை சுற்றல் பிரச்சினைக்கு உள்காது நோய்தான் காரணம் எனத் தெரியவந்தது. இதையடுத்து உள்காதின் செயல்பாடுகளையும் அதனால் ஏற்படும் நோய்களையும் மருத்துவ உலகம் தீவிரமாக ஆராயத் தொடங்கியது.

*மீனியர்ஸ் நோய் அறிகுறிகள்*

மீனியர்ஸ் நோயாளிகளுக்கு காதில் சீழோ வலியோ இருப்பதில்லை. ஆனால் காதுகேட்பது குறைவாகவும் காதில் இரைச்சலும் (Tinnitus) இருக்கும். ஒவ்வொரு தடவை தலை சுற்றல் வரும் போது சுமார் 2 மணி நேரத்திலிருந்து ஒரு நாள் முழுவதும் மயக்க நிலை இருக்கும் மயக்கம் முழுமையாக இருக்காது. அதோடு குமட்டலும் வாந்தியும் இருக்கும்.

மீனியர்ஸ் நோய் உடனடியாகவும் வரும். ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் போதும் வரும். தூங்கும்போதும் வரும் நோயாளிக்குத் தானே சுற்றுவது போலவும் சுற்றியுள்ள பொருள்கள் சுற்றுவது போலவும் தோன்றும். மயக்கம் வருவது போலவும் நிலையான தன்மை இல்லையென்றும் உந்தித்தள்ளாடுவது போன்றுள்ளது என்றும் இத்தகைய நோயாளிகள் கூறுவார்கள். இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குப் படுக்கையிலேயே இருக்க வேண்டும் என்பது போன்ற உணர்வு இருக்கும்.

*காரணம் என்ன?*

உட்காதில் நீர் சேருவதால் மீனியர்ஸ் நோய் ஏற்படுகிறது. கொழுப்புச்சத்து அதிகம் உள்ள பொருள்களைச் சாப்பிடும் நிலையில் ரத்தம் மூலம் ஒரு சிறிதளவு கொழுப்பு உள்காதில் தேங்கினாலும் தலைசுற்றல் ஏற்படும். ஆனால் இந்நோயினால் ஏற்படும் தலை சுற்றல் விரைவில் சரியாகிவிடும். ஆனால் காது கேளாத் தன்மை அதிகமாகிக் கொண்டே வரும்.

*சிகிச்சை என்ன?*

காது அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட சில மாதங்கள் கழித்தோ அல்லது திடீரென்றோ தலை சுற்றல் பிரச்சினை ஏற்பட்டாலோ பயப்படாதீர்கள் உயிருக்கு எவ் வித ஆபத் தும் ஏற்படாது. காது மூக்கு தொண்டை மருத்துவரிடம் நோயாளியை உடனடியாக அழைத்துச்சென்று பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். தலை சுற்றலுடன் வாந்தி இருக்கும் நிலையில் நோயாக்குத் தெம்பு கிடைக்க மருத்துவமனையில் சேர்த்து டிரிப்ஸ் ஏற்ற வேண்டியிருக்கும் தலை சுற்றல் பிரச்சினையைப் போக்கும் நல்ல மருந்துகள் இப்போது உள்ளன. இம் மருந்துகள் சமநிலைக் கேந்திர உறுப்புக்கு ஓய்வு கொடுக்கும். மேலும் ரத்த ஓட்டத்தை அதிகரிக்க வல்லவை மூன்று நாள்களில் குணமாகிவிடும்.

*ஒரு திசையில் மட்டும் தலை சுற்றல் (B.P.P.V.)*

ஒரு சிலருக்கு ஒரு திசையில் மட்டும் பார்ப்பதாலோ அல்லது நிற்பதாலோ அல்லது குனிந்து பொருள்களை எடுப்பதாலோ தலை சுற்றல் ஏற்படலாம். இத் தகைய தலை சுற்றல் பாதிப்புக்கு (Benign Paroxysmal Positional Vertigo (B.P.P.V) என்று பெயர். இத் தகைய பாதிப்பு மேற்சொன்ன மீனியர்ஸ் நோய் அறிகுறிகளுக்கு எதிரான தாக இருக்கும். அதாவது இத்தகைய தலை சுற்றல் ஏற்படும் போது காது கேட்பதில் பிரச்சினை இருக்காது. காதில் இரைச்சல் இருக்காது.

*காரணம் என்ன?*

உள் காதில் சவ்வாலான அரைவட்டக் குழாய்கள் (Membranous Semi Circular Canals) உள்ளன. சவ்வாலான உள் காதில் நிணநீர் இருக்கும். இந்த நீர் திடீரென எதிர்த்திசையில் செல்லும் நிலையில் உள்காதில் உள்ள சமநிலை உறுப்பு (லேப்ரிந்த்) பாதிக்கப்பட்டு திடீரென தலை சுற்றல் ஏற்படுகிறது. மருத்துவ சிகிச்சை மூலம் இத்தலை சுற்றலைக் குணப்படுத்தி விடலாம்.

*பயிற்சிகள்*

தலைசுற்றல் தொடர்ந்து வராமல் தடுத்துக்கொள்ள சில பயிற்சிகள் உள்ளன. படுத்திருக்கும் போது கண்களை அசைத்தல், நிற்கும் போது தலையைத் திருப்புதல் நடந்து பந்தைக் கொண்டு பயிற்சி செய்தல் என சில பயிற்சிகளைத் தொடர்ந்து செய்வதன் மூலம் தலை சுற்றல் வருவதைத் தடுத்துக் கொள்ள முடியும். காது–மூக்கு தொண்டை மருத்துவரின் ஆலோனையுடன் இப் பயிற்சிகளைச் செய்வ்து மிகவும் நல்லது.

## மருத்துவ விளக்கம்

*உட்செவி நரம்பில் வைரஸ் தாக்குதல்*

சில சமயங்களில் ஜலதோஷம் காரணமாக உட்செவி நரம்பில் (Vestibule வைரஸ் தாக்குதல் காரணமாகவும் தலை சுற்றல் ஏற்படலாம். இந்நிலையில் உட் செவியிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்பை வைரஸ் தாக்கக்கூடும். இதற்கு வெஸ்டிபுலர் நியுரோனைட்டீஸ் Vestibular Neuronitis) என்று பெயர். காது கேட்கும் காது இரைச்சல் இருக்காது மருத்துவ சிசிக்சையுடன் மூன்று அல்லது நான்கு நாள்கள் ஓய்வு எடுத்தால் குணமாகிவிடும்.

*நடுக்காது நோய் காரணமாக தலைசுற்றல்*

நடுக்காதில் சளி சுரக்கப்பட்டு அச்சளி பெரும்பாலும் காது தொண்டைக் குழாய் (Eustachian Tube) வழியே வெளியே வந்து விடும். அவ்வாறு வெளிவராமல் நடுக்காதின் உள்ளே நீர் தேங்கினால் நடுக்காதில் பிரச்சினை ஏற்பட ஆரம்பிக்கும்.

நடுக்காதில் ஏற்படும் கீழ் செவிப் பறைத் துளையின் வழியாக வெளிவருகிறது. இதனால் செவிப்பறை பழுதடைகிறது. சில சமயங்களில் செவிப்பாறை கிழிந்துவிடும். அப்படி கிழிந்த துளையுள்ள செவிப்பறையின் வழியாகத்தான் சீழ் வடிந்து வெளியே வருகிறது. இத்தகைய விளைவு காரணமாக முதலில் காதில் வலி ஏற்படும். காது அடைப்பு தலைவலி ஆகியவையும் ஏற்படலாம். நடுக்காதில் நோய்த் தொற்று அதிகமாகி உள்காதில் உள்ள சமநிலை உறுப்பைத் தாக்கி தலை சுற்றல், வாந்தி ஏற்படவும் வாய்ப்பு உண்டு. நிலைமை மோசமாகும். நிலையில் நோய்த் தொற்று மூளை வரை பரவி உயிருக்கு ஆபத்தாக முடியும்.

*அறுவைச் சிகிச்சையே தீர்வு*

செவிப்பறை துயையை அடைத்து கிருமித் தொற்றை முற்றிலுமாக அகற்றி எதிர் காலத்தில் பிரச்சினை வராமல் தடுப்பதற்கு அறுவைச் சிகிச்சையே தீர்வாகும். இதற்கு கூம்பு எலும்பு அறுவைச் சிகிச்சை அல்லது மாஸ்டாய்டக்டமி (Mastoidectomy) ஹன்று பெயர். செவிப்பறை துளையை அடைப்பதற்கு டிம்ப னோபி ளாஸ்டி (Tympanoplasty) என்ற எளிய அறுவைச் சிகிச்சை உள்ளது. இதே போன்று காது சீழ் காரண மாக எலும்புகள் அரிக்கப் படும் (Cholesteatoma) நிலையிலும் தொடர் விளைவுகளைத் தடுக்க அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம்.

சில சமயங்களில் காதில் அதிக அழுக்கு (Wax) சேர்ந்தாலும் தலை சுற்றல் உணர்வு ஏற்படலாம். காது மருத்துவரிடம் சென்று அழுக்கை எடுத்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும்.

காலையில் எழுந்தவுடன் பிடரியில் வலியுடன் தலை சுற்றினால் ரத்த அழுத்தத்தைப் பரிசோதனை செய்துகொள் வது அவசியம். இதே போன்று நீரிழிவு நோயாளிகளுக்கு தாழ் சர்க்கரை நிலை காரணமாக தலை சுற்றல் ஏற்படும் தைராய்டு சுரப்பியின் சுரப்பு அளவு மாறுதல்களால் கூட தலை சுற்றல் பிரச்சினை வரலாம்.

காது நோய்கள் காரணமாக தலை சுற்றல் பிரச்சினை ஏற்படும் நிலையில் உணவில் உப்பை குறைத்துக்கொள்ள வேண்டும் கொழுப்புச் சத்து அதிகமாக உள்ள பண்டங்களையும் குறைத்துச் சாப்பிட வேண்டும் வேலைப் பளுவைக் குறைத் துக் கொள்ளுவதும் அவசியம்.

டாக்டர் சி.ஜெசிந்த்

# வீடுகளை நிர்மாணிக்க நிதியுதவி

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 5 கிராம சேவையாளர் பிரிவுகளில் நடப்பாண்டு உலகவங்கியின் வீடமைப்புத்திட்டத்தில் யுத்த அனர்த்தங்களால் தங்கள் வீடுகளை இழந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 337 குடும்பங்களுக்கு புதிதாக வீடுகள் நிர்மாணிப்பதற்கு 2 அரை இலட்சம் ரூபா கட்டம் கட்டமாக விரைவில் வழங்கப்படவுள்ளதாக மேற்படி பிரதேச செயலக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சங்கிலியன் தோப்பு, வண்ணார்பண்ணை வடக்கு மற்றும் கிழக்கு, கொக்குவில் மத்தி மற்றும் கிழக்கு, கோண்டாவில்–மத்தி மற்றும் கிழக்கு, வண்ணார் பண்ணை வட–மேற்கு ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் காணி உறுதிகள், பங்கீட்டு அட்டை போன்ற ஆவணங்கள் தற்போது பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும், இது தொடர்பான கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது என்றும் கூறப்படுகிறது. இக் கூட்டத்தில் வடக்கு–கிழக்கு மாகாண புனர்வாழ்வு மீள் குடியேற்ற அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் கலந்து கொண்டு புதிய வீடமைப்பு சம்பந்தமாக கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க–9)

# நயினை ஆலய உற்சவம் குறித்த முகாமைத்துவக்கூட்டம்

நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த பெருவிழா தொடர்பான முகாமைத்துவக்கூட்டம் இன்று மு.ப.10.30 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் எம்.நந்த கோபாலன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் படகுச் சேவை, போக்குவரத்து, கடற்படையினரின் சோதனைச்சாவடி, மின்சாரத்தைப் பெறுவதற்கு தேவையான எரிபொருள் மற்றும் உள்ளூராட்சி சபையின் சுகாதார மேம்பாட்டு சேவை தொண்டர் நிறுவனங்களின் சேவை என்பன குறித்து ஆராயப்படும் என ஆலய நிறைவேற்று அதிகாரி நா.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் வேலணை பிரதேச சபைச் செயலாளர் மற்றும் அலுவலர்களும் கலந்துகொள்வார்கள். (க)

# தேர்தலில் வாக்களிக்க தகுதியானவர்கள் தேர்தல் இடாப்பில் பெயரை பதிய வேண்டும்

## பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் இடாப்பை மீளாய்வு செய்யும் பணிகள் ஜுன் மாதம் முதலாம் திகதி முதல், ஜுலை 31 ஆம் திகதிவரை இடம்பெறுவதால் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் அனைவரும் தமது பெயர் தேர்தல் இடாப்பில் பதியப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என பவ்ரல் அமைப்பு சகல மக்களுக்கும் அறிவித்துள்ளது. இது தொடர்பாக பவ்ரல் அமைப்பு வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது,

தேர்தல் இடாப்பில் திருத்தம் மேற்கொள்ளும் வருடாந்த பணியானது ஒவ்வொரு கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேர்தலில் வாக்களிப்பதற்கு சட்ட பூர்வ உரிமையுள்ள சகலரும் தமது பெயரைத் தேர்தல் இடாப்பில் பதிந்து கொள்வதன் மூலம், பின்னர் ஏற்படும் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பலருடைய பெயர்கள் வாக்காளர் இடாப்பில் காணப்படாமை குறித்து எமக் குப் பலமுறைப்பாடுகள் கிடைத்தன.

எனவே இவ்வாறான தவறுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு தேர்தல் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோருகிறோம். (க–9)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம், இன்று மு.ப.9 மணிக்கு அவசர கலந்துரையாடல் ஒன்றை ஆரிய குளத்தில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடத்தவுள்ளது.

இக்கலந்துரையாடலில் நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறாத அணைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

# ஜர்காவி கொல்லப்பட்டதற்கு புஷ், பிளேயர் மகிழ்ச்சி தெரிவிப்பு

(அமெரிக்கா)

ஒஸாமா பின்லேடனிற்கு இணையாக அமெரிக்கப் படைகளால் தேடப்பட்டு வந்த அல்ஜர்காவியின் கொலையை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மற்றும் பிரித்தானிய பிரதமர் டொனி பிளேயர் ஆகியோர் வரவேற்றுள்ளனர்.



மேலும் ஈராக்கில் நாளாந்தம் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகள் உட்பட அனைத்து பயங்கரவாத நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமெனவும் எச்சரித்துள்ளனர்.

இது பயங்கரவாதத்திற்கெதிரான உலகளாவிய போக்கிற்கு கிடைத்த வெற்றி எனக் கூறியுள்ள அவர்கள், அல்குவைதா அமைப்பிற்கு இது பாரிய அடியெனவும் இதேபோல சகல தீவிரவாதிகளும் அழிக்கப்படுவார்கள எனவும் தெரிவித்துள்ளனர்.

அல்குவைதா அமைப்பின் ஈராக்கிற்கான தலைவர் அபு முஸாப் அல்ஜர்வி கொல்லப்பட்டு விட்டதாக அமெரிக்க இராணுவம் அறிவித்திருந்தது. பக்தாத்தின் வடகிழக்கு நகரான பக்தியுபாவிலுள்ள ஒரு வீட்டில் அல்ஜர்காவியும் இன்றும் சில தீவிரவாதிகளும் பதுங்கியிருக்கும் தகவல் எமக்குகிடைத்தது.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த அமரிக்காவின் எப்.16ரக போர் விமானங்கள் சரமாரியாக குண்டுத்தாக்குதல் நடத்தின இதில் ஜர்காவி இருந்த வீட்டின் மீது 230 கிலோ கிராம் எடையுடைய இரு குண்டுகள் வீசப்பட்டதாகவும் இதனையடுத்து அவ்வீடு தரைமட்டமானதாகவும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் படைகளால் கைதுசெய்யப்பட்டுள்ள அல்குவைதா அமைப்பின் முக்கிய தலைவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே ஜர்காவி தங்கியிருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ஈராக்கியப் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு, உளவுத்துறை ஆகிய பதவிகளுக்கு பாராளுமன்றம் அனுமதியளித்ததற்கு சில மணிநேரத்திற்கு முன்னதாகவே அல்ஜர்காவின் கொலை தொடர்பான செய்தி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

கைரேகை அடையாளங்கள், உடலில் பொறிக்கப்பட்டிருந்த படங்கள் போன்ற தடயங்களைக் கொண்டு கொல்லப்பட்டவர் அல்ஜர்காவியே என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (து)

உலக தரிசனம்

# ஆங்சான் சூகி மருத்துவமனையில் அனுமதி

மியான்மர் நாட்டு அரசியல் தலைவர் ஆங் சான்சூகி கடுமையான வயிற்றுப் போக்கால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மியான்மர் நாட்டில் பல ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இங்கு ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தக் கோரி போராடி வருபவர் ஆங்சான்சூகி. இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடி வருவதற்காக இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. கடந்த 16 வருடங்களாக சூகியை இராணுவ ஆட்சியாளர் கள் வீட்டுக் காவலில் வைத்துள்ளனர்.



இந்தநிலையில் ஆங் சூகிக்கு கடந்த சனிக்கிழமை வயிற்று போக்கு ஏற்பட்டு உடல் நலம் குன்றியது இதையடுத்து அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சூகியை மருத்துவ பரிசோதனை செய்வதற்காக டாக்டருக்கு அனுமதி கிடைப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் சூகியை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதில் தாமதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே ஆங்சான் சூகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை பற்றி கேள்விப்பட்டோம். அதை உறுதிப்படுத்த முடியவில்லை. இது பற்றி மியான்மர் அரசை தொடர்புகொண்டுசூகிக்கு தேவையான மருத்துவ வசதிகளை விரைவாக செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொள் வோம் என்று அமெரிக்க வெளியுறவு செய்தி தொடர்பாளர் சீன்மேக்கிராமேக் தெரிவித்தார். (கு)



சீன தலைநகர் பெய்ஜிங்கில்
மிக தடித்து கொளுத்து போனவர்கள் அடங்கிய
கிளப் துவக்கப்பட்டது. இந்த விழாவில் ஆடி
களைத்து போன 22 வயது ஷியாயாங்.
இவரது எடை 150 கிலோ.



வங்கதேச பிரதமர் காலடாஜியா பதவி விலககோரி எதிர்ப்பாளர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

# ஜப்பானில் நேற்று நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானின் மேற்கு மற்றும்தெற்கு பகுதியில் நேற்று காலை அடுத்தடுத்து 2 முறை நில நடுக்கம் ஏற்பட்டது. முதலா வது நிலநடுக்கம் இந்திய நேரப்படி அதிகாலை 1.31 மணிக்கு ஏற்பட் டது. ரிக்டர் அளவில் 6.2 ஆக இது பதிவானது. கியூஷு தீவுப் பகுதியில் ஏற்பட்ட இந்த நில நடுக்கத்தில் வீடுகள் கட்டடங்கள் அதிர்ந்தன.

பூமிக்கு அடியில் 140 கி.மீ.ஆழத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது இதனால் அதிக அளவு சேதம் ஏற்படவில்லை. ஒரு சில கட்டடங்கள் சேதம் அடைந்தன. வீடுகள் குலுங்கியதில் கட்டிலில் படுத்திருந்த சில முதியவர்கள் உருண்டு கீழே விழந்தனர். பீதியால் சிலர் மாடியில் இருந்து குதித்ததால் காயம் அடைந்தனர்.

இதுவரை 8 பேர் காயம் அடைந்துள்ளனர். உலகப் போரின் போது அணு குண்டு வீசப்பட்ட ஹீரோஷிமாவில் கட்டடங்கள் அதிர்ந்தன. அந்த பகுதியில் உள்ள ஒரு கார் தொழிற்சாலை, அணு சக்தி நிலையம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை சேதம் இன்றி தப்பின.

ஒரு சில இடங்களில் ரயில் பாதைகளில் லேசான சேதம் ஏற்பட்டது. இதை தொடர்ந்து பாதுகாப்பு கருதி அதி வேக புல்லட் ரயில் உட்பட பல்வேறு ரயில்கள் நிறுத்தப்பட்டன. இந்த நில நடுக்கம் ஏற்பட்டு 3 மணி நேரத்துக்குப் பிறகு மீண்டும் 4.8 ரிக்டர் அளவில் ஹெக்கைடோ பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. (து)



கிழக்கு சீனாவில் உள்ள ஹாங்ஜூ பகுதியில் கடும் புயல் வீசியது. இதில் விழுந்த ராட்சத மரத்தில் சிக்கிய கார்.

# ஜர்காவியைக் கொன்றது தற்செயலானதே அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவிப்பு

அல்குவைதா தலைவனும் கொடிய தீவிரவாதியுமான அல்–ஜர்காவி கொல்லப்பட்டது தற்செயலானது தான்அவர் மறைந்திருந்த கட்டடத்தைத் தகர்த்து அவரைக் கொல்ல முன்கூட்டியே திட்டமிடவில்லை என ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படை களின் செய்தித் தொடர்பாளர் வில்லியம் கால்டு வெல்நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஜர்காவி மறைந்திருந்த இடத்தை பன்னாட்டுப் படைகள் சுற்றி வளைத்தன. அதன் பிறகு விமானப்படை விமானங்கள் ஜர்காவி மறைந்திருந்த கட்டடத்தின் மீது குண்டுகளை வீசின என்று பத்திரி கைகளில் வெளியான தகவல்கள் உண்மையல்ல.

பன்னாட்டுப் படைகளின் விமானங் கள் எப்போதும் போலவே விண்ணில் பறக்கத் தொடங்கின விமானங்கள் பறக்கத் தொடங்கிய போது குறிப்பிட்ட இடத்தை அடைத்ததும் அங்கிருந்த கட்டடத்தின் மீது குண்டுகளை வீசுமாறு விமானிகளுக்குக் கட்டளையிடப்பட்டது. என்று கால்டு வெல் மேலும் கூறினார். (து)

# புதிய அல்குவைதா தலைவர்

(பக்தாத்)

ஈராக்கில் செயல்பட்டு வந்த அல்கு வைதா இயக்க தலைவர்கள் குண்டு வீசி கொல்லப்பட்டதை தொடர்ந்து அந்த இயக்கத்தின் புதிய தலைவராக அப்துல் ரகுமான் ஈராக்கில் நியமிக்கப்பட்டுள்ளார். ஈராக்கில் அமெரிக்க படையினருக்கு எதிராகவும் புதிய அரசுக்கு எதிராகவும் தீவிரவாதிகள் தொடர்ந்து கார் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள்.

இந்த தீவிரவாதிகளை வேட்டையாட அமெரிக்க படையினர் தீவிரவாதிகளின் பதுங்கு இடங்களில் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள். இதில் ஈராக்கின் அல்குவைதா இயக்க தலைவர் அபு முசாப் அல் ஜர்காவி கொல்லப்பட்டார். 24 இல் கொய்தா தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். ஏராளமான ஆயுதங்கள் சிக்கின.

அல்ஜர்காவி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அந்த இயக்கத்தின் புதிய தலைவராக அபு அப்துல் ரகுமான் அல் ஈராக்கி நியமிக்கப்பட்டுள்ளார். தீவிரவாதிகளின் இணையதளம் ஒன்றில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

ஒருவர் கையை எதிர்பார்த்திராதே. உன்கொள்கை களை நீயே சாதித்துக் கொள்ள முயற்சி செய்.
-சுவாமி இராமதாசர்

வலம்புரி

## அரசுக்கு அழுத்தம் கொடுக்காமை சர்வதேசம் விட்ட பெரும் தவறு

இலங்கையில் போர் மூளும் சாத்தியமே தென்படுகின்றது. அதற்கான ஏதுக்கள் தாராளமாக இருக்கின்றன.

போரைத் தடுக்கும் வழி ஏதேனும் உண்டா? என்றால் இல்லை என்பதே அதற்கான விடையாக இருக்கும்.

அடுத்த மாதப் பகுதியில் இலங்கையில் பாரிய யுத்தம் வெடிக்கும் சாத்தியப்பாடுகள் இருப்பதாக அரசியல் ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த முப்பது ஆண்டுகளாக விடுதலைப் போராட்டம் தொடர்கின்றது. பெரும்பான்மையினத்தின் ஆட்சி அதிகாரங்கள் சிறுபான்மையினமான தமிழ் மக்களை காலாகாலமாக நசுக்குகின்றது. இதற்கு ஓர் முடிபு தேவை.

அந்த முடிபை பேச்சு மூலம் எட்டுவதாகவிருந்தால் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய - அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய- இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் தங்களின் பூர்வீகத் தாயகத்தை ஆளக்கூடிய வகையில் அந்த முடிபு அமைதல் வேண்டும்.

இதை விடுத்து முப்பது வருட கால விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் அல்லது அதனை கொச்சைப்படுத்தும் வகையில் அரசு செயற்படுமாயின் அதன் முடிபு சிறுபான்மையினமான தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து தமக்கான தாயகத்தை நிர்ணயித்துக் கொள்ள வழிவகுக்கும்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை அதற்கு பௌத்த சிங்கள சிந்தனையே மேலோங்கியுள்ளது.

இந்நிலையில் பௌத்த , சிங்களம் என்பதற்கப்பால் மனித உரிமைகள் பற்றியோ, அன்றி ஒரு நாடென்ற வகையில் எல்லா மக்களும், சம உரிமையுடன் வாழ வேண்டும் என்ற எண்ணப்பாடோ இலங்கை அரசிடம் இல்லை.

மனித உரிமைகள் விடயத்தில் பஞ்சப்பட்ட இலங்கை அரசுக்கு அது பற்றி எடுத்துக் கூற வேண்டிய தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு.

எனினும் அதைச் செய்வதில் சர்வதேச சமூகம் தவறிவிட்டது. இலங்கை அரசின் பொய்ப் பிரசாரங்களை நம்பிய சர்வதேசம் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் அடாவடித்தனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

அதேநேரம், இலங்கையில் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் குறித்தோ அன்றி அவர்கள் தமது சொந்த வாழ்விடங்களில் குடியிருக்க முடியாதிருப்பது குறி த்தோ எதுவித அக்கறையும் காட்டவில்லை.

மாறாக தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தில் குறைகாண்பதையே தனது கடமையாக சர்வதேச சமூகம் கொண்டிருந்தது.

இதன் விளைவாகவே இலங்கையில் மிகப் பெரும் போர் மூளவுள்ளது. பொறுப்பு வாய்ந்த சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு உரியவாறு அழுத்தம் கொடுத்திருந்தால் நிச்சயமாக தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருக்கும்.

## முட்செடியை முளையிலே கிள்ளி எறிய வேண்டும்!

## வளரவிட்டால் அது எம்மை வருத்தும் என்கிறது ஐரோப்பிய தமிழர் பேரவை

(கொழும்பு)

**பொறுத்தது போதும் பொங்கியெழு என்ற நிலைக்கு நாம் வந்துள்ளோம் .எதிரியானவன் எமது பொறுமையைச் சோதிக்கின்றான். நாம் பொறுமையை காத்திருக்க அவன் எமது மக்களை குடும்பம் குடும்பமாகவும் எமது போராளிகளை கொத்துக்கொத்தாகவும் அழித்துவருகிறான். நிலைமை கட்டுக் கடங்காமல் போய்விட்டது. இதைத்தொடரவிட்டால் பேராபத்தை எதிர்நோக்கவேண்டி வரும் என ஐரோப்பிய தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதன் முழுவடிவம் வருமாறு,

போருக்கு தயாராகுவேம் என்ற நிலை மாறிவிட்டது. உடனடியாக போரைத்தொடங்கவேண்டிய கட்டாயத்தேவை தோன்றிவிட்டது. அமைதியின் பெயரால் மக்களையும் போராளிகளையும் இழந்த படி இருக்க முடியுமா? போரில் இறந்தால் அது பெறுமதி மிக்க, வேண்டிப்பெறவேண்டிய சாவு.ஆனால் எதிரி எம்மை படுகொலை செய்வதை அனுமதிக்க வேண்டிய தேவை என்ன? நாம் ஏன் பொறுமை காக்கவேண்டும். தமிழ் உறவு களே பதில் கூறுங்கள். ஆயுதம் தூக்கவேண்டியதும் களத்தில் இறங்கவேண்டியதும் காலத்தின் கட்டாயம் நாம் தமிழர் என்று உலகில் வாழ்வதில் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும்.

எமது தன்மானம் காப்பாற்றப்படவேண்டும். தமிழனென்ற செருக்கும் இறுமாப்பும் எம்முடைய சொல்லிலும் செயலிலும் இருக்கவேண்டும். பகைவனை அடக்கும் பலம் எமது விடுதலைப்போர்தொடங்கிய காலம் தொட்டு எம்மிடமுண்டு.

இன்று உச்சக்கட்ட வளர்ச்சிகண்டுள்ளோம். எதற்கும் தயார் என்ற நிலையில் உள்ளோம். ஆகையால் தயக்கம் தவிர்ப்போம், களத்தில் இறங்குவோம் சிறிதாக இருக்கும் போதே முச்செடியை கிள்ளியெறியவேண்டும். வளர விட்டால் அது எம்மை வருத்தும் பகைவனை வேரோடு கிள்ளியெறிவோம்.

எமது தாயக மண்ணிலிருந்து அவனை விரட்டியடிப்போம். இது தான் பொருத்தமான நேரம் எமது போர்குணத்தையும் வீர பாரம்பரியத்தையும் நன்கு அறிந்த இராணுவமும் அரசும் துணைப்படைகளும் எம்மைச் சீண்டிப்பார்க்கின்றனர். அவர்கள் வாங்கிக்கட்டத் தீர்மானித்து விட்டார்கள். அவ்வளவுதான்.

நாம் பொறுமையாக இருக்கும் போது சிங்களவன் எமது கழுத்தில் கைவைக்கிறான். நாம் தாக்கத்தொடங்கியவுடன் எமது காலடியில் கிடப்பான் இது தான் சிங்கள வீரத்தின் கோழைத்தனம். எமது கலடியில் அவனை கிடத்துவோம்.

தமிழ் வீரத்தை அவனுக்கு மீண்டும் உணர்த்துவேரம். மிகவும் கீழ்த்தரமான செயல்களைச் செய்வதில் தேர்ச்சி பெற்ற முப்படையினரை மண் கவ்வச் செய்வோம். பொங்கியெழுவோம், புனித யாகத்தில் குதித்துவிட்டோம். இனித் தயங்குவதில் பயனில்லை. போர் என்றால் உயிரையும் மதியாது போரிடும் நாம் எமது தாய்க்குலத்தின் மானம் பறிபோவதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? தமிழ் உறவுகளே ! தானைத் தலைவன் உண்டு, தன்மானப்படை உண்டு, வீரம் செறிந்த வரலாற்று பாரம்பரியம் உண்டு .எமது தாய்க் குலத்தின் உயிர் நாடியில் சிங்களக் காடையன் கைவைத்து விட்டான்.

கடந்த ஆனி 8ஆம் திகதி மன்னார் மாவட்டம் வங்காலையில் நடந்த கொடூரத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு மானமுள்ள தமிழிச்சியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சில காமுகர்கள் அவளைக் கொன்றும் விட்டனர். அவளுடைய கணவனும், 9மற்றும் 7வயதுடைய பிள்ளைகள் கொலை செய்யப்பட்டு கட்டி தொங்கவிடப்பட்டுள்ளனர்.

சென்றமாதம் 13ஆம் திகதி வேலணை அல்லைப்பிட்டியில் நான்குமாதக்குழந்தையும் நான்குவயது சிறுமியும் உட்பட 13 அப்பாவிகளை கடற்படையினரும் துணைக்குழுவினரும் சுட்டுக்கொன்றுள்ளனர்.

அல்லைப்பிட்டி மக்கள் ஒட்டு மொத்தமாக வெளியேறி யாழ். நகருக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடம்பெயர்ந்துள்ளனர்.


உங்கள் பாதுகாப்பிற்கு நாங்கள் பொறுப்பு நீங்கள் திரும்பிப்போங்கள் அல்லைப்பிட்டிக்கு என்று அரசும் படையும் மீண்டும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றனர். மக்கள் இதை நம்பத்தயாரில்லை. அரசு வழங்கும் உறுதிமொழி நீர்மேல் எழுத்து என்பதை அறிவோம். பாதுகாப்பு தருகிறோம் என்று கூறி ஒரு மாதம் முடியும் முன் வங்காலைக்கொடூரம் நடந்துள்ளது. இப்போது ஒட்டுமொத்தமாக வெளியேறும் படலம் மன்னார் மாவட்டத்தில் நடக்கிறது. சம்பவம் நடந்த தோமாஸ்புரி உட்பட 3கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தேவலாயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

பாதுகாப்பு தர வந்துள்ளவர்கள் தான் இப்பாதகச் செயலை செய்துள்ளனர். என்று மன்னார் ஆயர் அருட்திரு இராயப்பு ஜோப் அடிகளார் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் கோப்பாய் தரவை உட்பட யாழ்.குடாவில் பல பகுதிகளில் புதைகுழிகள் திறக்கப் படுகின்றன. 1996 ஆம் ஆண்டு செம்மணி புதைகுழி, 2006 ஆம் ஆண்டு கோப்பாய் புதைகுழி என்று வரலாறு தொடர்கின்றது.

இனிய தமிழ் உறவுகளே! போர்குணம் மிக்க புரட்சிகர சமூதாயம் எம்முடையது. எமது சொந்த பலத்தில் நாம் வேரூன்றி நிற்கிறோம். நாம் தனி ஒரு நாட்டையோ சர்வதேச சமூகத்தையோ நம்பி எமது விடுதலைப்போரை தொடங்கவில்லை எமது மக்கள் தான் எமது பலம். எதிரியால் ஆக்கிர மிக்கப் பட்டிருக்கும் எமது தாயக மண்ணை மீட்பது வரலாற்றின் கட்டளை இப்போது இது தான் எமது முதற்கடமை எதிரியை விரட்டுவோம், விடுதலைபெறுவோம் என்று சபதம் எடுப்போம். நம்புங்கள் தமிழீழம் திறக்கும் என்பது உறுதி என்றுள்ளது (க)

## சமாதான செயற்பாடுகளில் இருந்து அரசு ஒரு போதும் விலகாதாம்

## பாலித்த கொஹன தெரிவிப்பு



(கொழும்பு)

சமாதான செயற்பாடுகளிலிருந்து அரசாங்கம் ஒரு போதும் விலகப்போவதில்லை என்று சமாதானசெயற்பாடுகளின் இணைப்பு அலுவலகத் தலைவர் கலாநிதி பாலித்த கொஹன தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையின் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டு மென்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் வாழும்தமிழ். சிங்கள, முஸ்லிம் , பறங்கியர் ஆகிய சகல இன மக்களும் அன்னியோன்னியமாகவும் சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்றசிந்தனையுடனேயே அரசாங்கம்செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒஸ்லோவிலிருந்து நாடுதிரும்பிய பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் அக் கருத்துக்களை தெரிவித்துள்ளார். ஒஸ்லோ பேச்சுவார்த்தைக்காக நோர்வேக்கு சென்ற இலங்கைக் குழுவின் தலைவர் பாலித்த கொஹன நேற்றும் அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில், நோர்வேயின் அழைப்பை ஏற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அரச பிரதிநிதிகளும் அங்கு சென்றதாக தெரிவித்தார். இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற் பாடுகள் குறித்தே ஒஸ்லோவில் ஆராயப்பட்டதாகவும் அது சமாதானப் பேச்சுவார்த்தை அல்ல எனவும் இது குறித்து ஏற் கனவே இரு தரப்பினருக்கும் தெளிவாக அறிவிக்கப் பட்டிருந் ததாகவும் கொஹன கூறினார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காக விடுதலைப்புலிகள் சார்பில் பலர் நோர்வே சென்றுள்ளதாகவும் அவர் களுக்கான செலவீனங்களை நோர்வே வழங்கிருந்த தாக வும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் அவர்கள் என்ன நோக்கத்திற்காக நோர்வே சென்றவர்கள் என்ற சந்தேகம் தற்போதும் எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## வங்கி ஊழியர்களுக்கு விரைவில் சம்பள உயர்வு?

(கொழும்பு)

அரசாங்க வங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வுக்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி மஹிந்தரா ஜபக்ஷ வழங்கியுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அரசாங்க வங்கிக ளின் தலைவர்கள் அலரிமாளிகையில் சந்தித்து வங்கி ஊழி யர்களின் சம்பள உயர்வு குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இப்பேச்சுவார்த்தையின் இறுதியில் அரச வங்கி ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவது என்று தீர்மானிக் கப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையில் இலங்கை வங்கி ,மக்கள் வங்கி, அரச முதலீட்டு வங்கி ஆகியவற்றின் தலைவர்கள கலந்து கொண்டார்கள். (க-9)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



மனிதனைப் படைத்த இறைவன்தான் எல்லா மதங்களையும் படைத்திருக்கிறான் . எனவே எல்லா மதங்களையும் மதிப்பதுதான் உண்மையான ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்கும்.

# பக்தர்களுடன் சென்ற பஸ் கிளைமோரில் சிக்கியது

## முல்லைத்தீவில் சம்பவம்

(கிளிநொச்சி)

வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் வைபவத்தில் கலந்து கொள்ளச் சென்ற மக்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸை இலக்கு வைத்து நேற்று கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு நெடுங்கேணி வீதியிலுள்ள கள்ளிக்காட்டுப்பகுதியில் நேற்று பிற்பகல் 12.50 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினாலேயே இத் தாக்குதல் நடத்தப் பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது. எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பஸ் சிறிது சேதத்துக்குள்ளானது.

முள்ளியவளையிலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் கள்ளிக்காடு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வெண்புறா அமைப்பின் நிர்வாகிமீது சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரச சார்பற்ற நிறுவனமான வெண்புறா அமைப்பின் மூத்த நிர்வாகி தங்கராஜா முகுந்தன் (வயது-41) மீது அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

யாழ். மூளாயில் உள்ள அவரது வீட்டில் நேற்றிரவு 7 மணியளவில் நடத்தப்பட்ட இத் துப்பாக்கிச் சூட்டில் அவர் படுகாயமடைந்தார். யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினராகவும் தங்கராஜா பணியாற்றினார். (ச-5)

# இலங்கையில் 40 ஆயிரம் சிறார்கள் பாலியல் தொழிலாளர்களாகவுள்ளனர்

## யுனிசெவ் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 40 ஆயிரம் சிறார்கள் பாலியல் தொழிலாளர்களாக இருப்பதாக யுனிசெவ் மற்றும் சர்வதேச தொழிலாளர் நிறுவன அறிக்கைகளை சுட்டிக்காட்டி தேசிய சிறார் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளதாக கொழும்பின் ஆங்கில நாளேடான டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

5 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையிலான சிறார்களை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஒருபால் உறவுக்காக பயன்படுத்துகின்றனர்.

அதேபோல் 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரையிலான கிராமப்புற சிறார்களை குற்றச் செயல்களைப் புரிகின்ற குழுவினர் கடத்திச் சென்று பாலியல் தொழிலில் ஈடுபடுத்துகின்றனர் என்றும் யுனிசெவ் மற்றும் சர்வதேச தொழிலாளர் நிறுவன புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

சிறார் பாலியல் தொழிலில் உலகின் சொர்க்கமாக இலங்கை விளங்குகின்றது. இலங்கையில் 2 ஆயிரம் பாலியல் தொழிலாளர்கள் இருப்பதாக அரசாங்கம் கணக்கிட்டுள்ளது. ஆனால் பல்வேறு அமைப்புக்கள் இந்த எண்ணிக்கை 40 ஆயிரம் என்று தெரிவிக்கின்றன. (ச-5)



நோர்வேயிலிருந்து சுவிஸ் சென்ற விடுதலைப்புலிகளின் தூதுக் குழுவினருக்கு சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பினால் மலர்ச் செண்டு வழங்கி வரவேற்பு அளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# பஸ் கட்டணங்களை அதிகரிக்க ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்

## அமைச்சர் பெளசி தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என்று போக்குவரத்து மற்றும் எண்ணெய் வள அமைச்சர் ஏ.எச்.எம்.பெளசி தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை அதிகரிப்புத் தொடர்பாக கருத்துக் கேட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் கூறுகையில்,

உலக சந்தையில் ஒரு பெரல் மசகு எண்ணெயின் விலை 71 டொலர்களாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் எமது நாட்டில் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்காமல் இருக்க முடியாது.

101 ரூபாவுக்கு வழங்க வேண்டிய ஒரு லீற்றர் பெற்றோலை 93 ரூபாவுக்கு வழங்குகின்றோம். அவ்வாறு இருந்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுஸ்தாபனத்திற்கு ஒரு மாதத்திற்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

இந்நிலையில் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மேலும் அதிகரிக்கப்படும் அபாயம் இருக்கின்றது.

பொதுவாக எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படும்போது அதனுடன் தொடர்புடைய ஏனைய சேவைகள் மற்றும் பொருட்களின் விலை அதிகரிக்கப்படுகின்றதைத் தவிர்க்க முடியாது.

இருப்பினும் பஸ் கட்டணங்களை அதிகரிக்க இடமளிக்க மாட்டோம். இதுவரை பஸ் கட்டண அதிகரிப்புக்கான கோரிக்கைகள் எதுவும்வரவில்லை. வந்தாலும் அதிகரிக்க அனுமதி வழங்கமாட்டோம் என்றார். (கு)

### வாகன...

இது தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுத்தினரானாலும் சரி ,பொலிசாரானாலும்சரி வீதிப்பரிசோதனையின் போது பெண்களைப் பெண் உத்தியோகஸ்தர்கள் மாத்திரமே பரிசோதனை செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினருடன் கடமையில் இருக்கும் பொலிஸார் தமக்குரிய பொலிஸ் இலக்கத்தை அணிந்திருப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (து-15)

### யாழில்...

கைக்குண்டு வீசப்பட்டதாகவும் அதில் படையினர் ஒருவர் காயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கல்வியங்காட்டு சந்திப்பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் இராணுவத்தினர் மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து சரமாரியான துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.எனினும் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை மேற்படி சம்பவங்களையடுத்து அந்தந்தப் பகுதிகளில் படையினர் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ச-15, 138)

# நெடுங்கேணி பிரதேச செயலரின் வாகனம் கிளைமோரில் சிக்கியது

(வவுனியா)

விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வவுனியா வடக்கு நயினாமடுக் கிராமத்தில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நேற்று நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் நெடுங்கேணி பிரதேச செயலரின் வாகனம் சிக்கியது.

நயினாமடு சுடுகாட்டுப்பகுதியில் நெடுங்கேணி பிரதேச செயலாளரின் வாகனத்தை இலக்கு வைத்து நேற்றுக் காலை 9 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் பிரதேச சபை செயலாளரின் ஓட்டுநர் நல்லதம்பி பாலசிங்கம் உயிரிழந்தார். தாக்குதலில் காயமடைந்த பிரதேச செயலாளர் பரந்தாமன், ஓட்டுநர் நல்லதம்பி பாலசிங்கம் ஆகியோர் வவுனியா மருத்துவமனையில் முதலில் அனுமதிக்கப்பட்டனர்.

அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஓட்டுநர் நல்லதம்பி பாலசிங்கம் கொழும்பு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். (ச-5)

# சினைப்பர் தாக்குதலில் போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதலில் மட்டக்களப்பு குடும்பிமலை அரசியல் ஒருங்கிணைப்பாளர் கப்டன் ரமணீரதன் என்ற வடிவேல் கங்காதரன் (வயது-28) வீரச்சாவடைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமையன்று காலை 9.45 மணிக்கு ரமணீரதனை இலக்கு வைத்து இராணுவத்தினர் சினைப்பர் தாக்குதல் நடத்தினர். சந்திவெளிப் பகுதி திகிலிவெட்டியில் இச் சம்பவம் நடந்ததாக மட்டக்களப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா மோகன் தெரிவித்தார். (ச-5)

# வவு.கிளைமோர் சிப்பாய் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் வீதியில் நேற்று காலை 8.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன் பொது மகன் ஒருவர் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலில் வீதியில் சென்ற பஸ் ஒன்றும் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. எனினும் பயணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்தக் கிளைமோர்க் குண்டு தென்னை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலில் குண்டை வெடிக்கவைக்க பயன்படுத்தப்படும் வயர்கள் மீட்கப்பட்டதாக இராணுவத்தரப்புத் தெரிவித்துள்ளது. (ச-9)

### பிரிக்கப்படாத...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நோர்வே 1999 இல் அனுசரணைப் பணிகளை ஆரம்பித்தது. அதன் பணிகள் பயனுள்ளதாக இருந்தன. ஆனால் குறிப்பிடத்தக்க வெற்றிகள் எதுவும் பெறப்படவில்லை. அதற்கு விடுதலைப்புலிகளின் தலைமையே தடையாகவிருந்தது. பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அடிப்படையிலிருந்து பல வருடங்களாக விடுதலைப்புலிகளைத் தெரிந்து கொண்ட வகையில் ஒஸ்லோவில் அவர்கள் வெளிப்படுத்திய பிடிவாதம் மற்றும் மாறமறுக்கும் தன்மை குறித்து அரசாங்கத்திற்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என அமைச்சர் தெரிவித்தார்.

அரச குழுவில் யார் இடம்பெற்றிருக்கின்றார்கள் என்பது பற்றி விடுதலைப்புலிகள் நன்கு தெரிந்து கொண்டே ஒஸ்லோ வந்தனர். எனினும் இங்கு வந்தவுடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் உயர் மட்டப் பிரதிநிதிகள் இல்லை எனத் தெரிவித்து அரச குழுவுடன் பேச மறுக்கும் துணிச்சல் அவர்களுக்கு வந்துள்ளது.

பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது என்பது தமது விடாப்பிடியான போக்கை நியாயப்படுத்த விடுதலைப்புலிகள் கையாளும்ஒரு குழப்ப முயற்சியாகவுள்ளது. பொது மக்கள் கொல்லப்படும் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆனால் அச்சம்பவங்கள் அனைத்தும் முழுமையாக விவாதிக்கப்பட்டுவிட்டன.

போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து அந்த ஒப்பந்தத்தின் தன்மை காரணமாக இச் சம்பவங்கள் நடைபெறும்போது குறிப்பாக அரச கட்டுப்பாடு அற்ற பகுதிகளுக்கு சட்டத்தை அமுல்படுத்தும் அமைப்புக்களோ, இராணுவத்தினரோ அங்கு சென்று விசாரணை நடத்த முடியாது.

ஏனெனில், இவற்றுள் சில விடுதலைப் புலிகளாலும் அவர்களைப் பிரிந்து சென்ற குழுக்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது என வும் மங்கள தெரிவித்தார். (ச-5)

### அமைச்சர்...

அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் நோர்வே வெளியுறவு அமைச்சர்கள் ஆகியோர் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர். (ச-5)

### நோர்வேக்கு...

அரசாங்கமும், எரிக்சொல் ஹெய்மும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாக குற்றம் சுமத் தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் விடுத்துள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் அண்மையில் நோர்வே சென்று அங்குள்ள சிங்கள ,தமிழ் மக்களைச் சந்தித்த பின்னரே இந்த முடிவைக் கட்சி எடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

### விமானப்...

தளபதியாக இருந்தார்.

ஹரிக்குணதிலக்கவின் மற்றொரு மகன் சிரந்தாவும் விமானப்படையில் அதிகாரியாக பணியாற்றினார். 1995-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளால் அடுத்தடுத்து இரு நாட்களில் சுட்டுவீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானங்களில் ஒன்றை ஓட்டிச்சென்றபோது அவர் கொல்லப்பட்டார். (ச-5)






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.